# தொழிலாளி

இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் வார இதழ்

மலர் 4 | இதழ் 45 | செப்டம்பர் 5, 1966 | பக்கங்கள் 8 | விலை சதம் 10


## வியட்நாம் மக்களுக்கு வீர வணக்கம்

''வியட்நாம் ஜனநாயகக் குடியரசு நிறுவப்பட்டதன் 21-வது ஆண்டு விழாவை முன்னிட்டு எமது கட்சி உறுப்பினர்களதும், மத்திய கமிட்டியினதும் சார்பிலும், இலங்கை வாழ் உழைக்கும் மக்களின் சார்பிலும் உங்களுக்கும் உங்கள் மூலமாக சகல வியட்நாமிய கம்யூனிஸ்டுகளுக்கும் வீரமிக்க வியட்நாமிய மக்களுக்கும் எமது உளங்கனிந்த ஆசியையும் புரட்சிகர வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்'' என வட வியட்நாமின் 21-வது தேசிய தினத்தையொட்டி வியட்நாம் லாஓ டொங் கட்சியின் மத்திய கமிட்டிக்கு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியினது மத்திய கமிட்டியின் செயலாளர் குழு அனுப்பி வைத்த வாழ்த்துச் செய்தி கூறியது. அது மேலும் கூறியதாவது:

''தலைவர் ஹோ சி மின்னால் தலைமை தாங்கப்படும் உங்களது கட்சியின் தலைமையில் வியட்நாமிய மக்கள் உலக மக்களின் கொடூர எதிரியான அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு மரண தாக்குதல் தொடுப்பதுடன், வியட்நாமின் தேசியகௌரவத்தையும், சுதந்திரத்தையும், ஆதிபத்தியத்தையும் பாதுகாப்பதோடல்லாமல், அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிரான உலக மக்களின் பொதுப் போராட்டத்திற்கும், உலக சமாதானத்திற்காகவும் தமது பங்கையும் செலுத்துகின்றனர்,

''உங்களது வீரம் செறிந்த போராட்டம், உலக மக்களின் பாபெரும் ஆதரவைப் பெற்றதோடல்லாமல், உலகெங்குமுள்ள மக்களை, குறிப்பாக ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையிலுள்ள உலக ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போராடுவதற்கும், வெற்றிகளை ஈட்டுவதற்கும் ஊக்கமளித்துள்ளது.

''உலக மக்கள் வியட்நாம் மக்களுக்கு உறுதுணையாயிருப்பதோடல்லாமல், தங்கள் நாட்டைப் பாதுகாப்பதற்கும், தமது தந்தையர் நாட்டை மீண்டும் ஒன்றுபடுத்துவதற்கும் அவர்கள் நடத்தும் நியாயமானப் போராட்டத்திற்கு உறுதியான ஆதரவை அளிக்கின்றனர். வீரமிகு வியட்நாமிய மக்கள் அமெரிக்க ஆக்கிரமிப்பை முறியடிப்பதிலும், இறுதியில் அவர்கள் வெற்றியடைவார்கள் என்பதிலும் உலக மக்கள் அசையாத நம்பிக்கை கொண்டுள்ளனர். அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் ''சமாதான மாநாடுகள்'' ''சமாதானப் பேச்சு வார்த்தைகள்''—போன்றவற்றை நடத்த ஆலோசனைகள் கூறி அமெரிக்க ஏகாதிபத்தியத்தை தோல்வியிலிருந்து காப்பாற்ற சிலர் முனைகின்றனர். அமெரிக்க ஏகாதிபத்தியம் வியட்நாம் மண்ணில் இருக்கும்வரை இவ் ஆலோசனைகள் வியட்நாமிய மக்களுக்கெதிரான மாபெரும் துரோ

—8-ம் பக்கம் பார்க்க

# 'எத்த'வுக்கு எமது சவால்

சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் முற்போக்குத் தினசரிகளை ஆரம்பிக்கப் போகிறோம் என நாம் விடுத்த செய்தி வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு வகையான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. உழைக்கும் மக்களும் பொதுவாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்கள் உட்பட்ட முற்போக்கு எண்ணம்கொண்ட மக்களும் மேலுமொரு ஏகாதிபத்திய எதிர்ப்பு, யூ.என்.பி. எதிர்ப்பு தினசரி வெளிவருவதை வரவேற்றுள்ளனர். குறிப்பாக முற்போக்கு சக்திகளின் ஐக்கியத்திற்கான தவறற்ற வழிகாட்டக்கூடிய பத்திரிகை என்ற முறையில் அவர்கள் இதனை வரவேற்றுள்ளனர்.

மறு புறம் எமது எதிரிகளிடையே நாம் எதிர்பார்த்த விளைவையே ஏற்படுத்தியுள்ளது. திரு. ஜே. ஆர். ஜயவர்வனவின் பத்திரிகையான 'ஜன ஹித' முன்பக்கத் தலைப்புச் செய்தியுடன் எமக்கு எங்கிருந்து பணம் கிடைக்கிறது என்ற கேள்வியுடன் அதன் இதழொன்றில் எம்மைத் தாக்கி எழுதியிருந்தது. ஆனால் அவதூறு பற்றிய சட்டங்களை அறிந்திருந்ததால்போலும் தோழர் சண்முகதாசனுக்கு எதிரான தமது நச்சுத் தாக்குதலை அவரது பெயர் குறிப்பிடாமல் மறைமுகமாகச் செய்தனர்.

### 'எத்தவின் பிதற்றல்'


ஆனால், 'எத்த'வின் திரிபுவாதக்கும்பல் எமதுபத்திரிகைகள் வெளிவருவதால் தமது பொய்கள் அம்பலமாகிவிடும் என்ற உண்மையினால் பாதிக்கப்பட்டு மேலும் ஒரு படி முன் சென்றுள்ளனர். அரசியல் நிருபர் என்ற நாமத்தின் பின்னால் தன்னை மறைத்திருக்கும் ஒரு பேடி தோழர் சண்முகதாசனுக்கு எதிராக விஷம் கக்கியுள்ளார். தோழர் சண்முகதாசனை அமெரிக்க மத்திய உளவறியும் ஸ்தாபனத்தின் (சீ. ஐ. ஏ.) பிரதிநிதி என்று கூறும் அளவுக்குச் சென்றுள்ளார். அது மட்டுமல்லாது எமது சிங்களத் தினசரியான 'ஜன ஹண்ட' அமெரிக்க சீ. ஐ. ஏ-வின் பண உதவியுடன் வெளிவரப் போகிறதென்றும் லேக் ஹவுஸ் பத்திரிகைகளினதும் யூ. என். பி.

—8-ம் பக்கம் பார்க்க

**அடுத்த இதழில்**

இம்மாதம் 12-ம், 13-ம் திகதிகளில் ஹட்டனில் நடைபெறும் செங்கொடிச் சங்க(தோட்டத் தொழிலாளர்) மாநாட்டையொட்டி அடுத்த இதழில் விசேஷக் கட்டுரைகளும் மற்றும் பல அம்சங்களும் இடம்பெறும்.





ஜோன் சனுக்குக் குறிவைக்கும் கொங்கோலிய விடுதலை வீரர்கள்.

செங்கொடிச் சங்க மாநாடு செப்டம்பர் 12, 13-ம் தேதிகளில்
ஹட்டன் ஸ்ரீபாத கல்லூரியில்
**செப்: 13-ந் தேதி ஊர்வலமும் பொதுக் கூட்டமும்**
ஹட்டனில் நடைபெறும்.

**வர்க்கப் போராட்டத்தை என்றும் மறவோம்**

# ஹட்டனில் தோட்டப் பாட்டாளிகளின் மாநாடு

இம் மாதம் 12-ம், 13-ம் திகதிகளில் இலங்கை தோட்டத் தொழிலாளர் (செங்கொடிச்) சங்கத்தின் மாநாடு ஹட்டன் ஸ்ரீபாத கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது சி. டி. யூ. எப்-புடன் இணைந்துள்ள செங்கொடிச் சங்கம் தோட்டத் தொழிலாளர்களிடையே உள்ள சங்கங்களிலே இரண்டாவது பெரிய சங்கமாகும். தோட்டத் தொழிலாளர்கள் சார்பில் நாளொன்றுக்கு ஒரு ரூபா சம்பள உயர்வு வேண்டுமென்ற கோரிக்கையுட்பட 12 கோரிக்கைகளை செங்கொடிச் சங்கம் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்திடம் சமர்ப்பித்திருப்பது அறிந்ததே. அக் கோரிக்கைகளுக்காக செங்கொடிச் சங்க அங்கத்தவர்கள் சுமார் மூன்று வார காலம் வேலைநிறுத்தம் செய்ததும் தெரிந்ததே. தற்போது நடைபெறவிருக்கும் மாநாட்டில் நாளுக்கு ஒரு ரூபா சம்பள உயர்வு அளி என்பதுவே பிரதான கோஷமாக எழுப்பப்படும்.

பல்வேறு பிரதேசங்களிலிருந்து சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இம் மாநாட்டில் கலந்துகொள்வதற்கென பல வெளிநாட்டுத் தொழிற் சங்கத் தலைவர்கள் இங்கு வருவார்கள். 13-ம் திகதி காலை ஹட்டனில் மாபெரும் தொழிலாளர் ஊர்வலம் ஒன்று நடைபெறும். அதன் பின் பொதுக் கூட்டமும் நடைபெறும். இக் கூட்டத்தில் தோழர்கள் என். சண்முகதாசன், ஹிக்கொட தர்மசேன, ரொசாரியோ பெர்ணாண்டோ, தீப்பொறி ஆசிரியர் எம் கே அந்தனிசில் உட்பட பல உள்நாட்டு, வெளிநாட்டுத் தொழிற்சங்கத் தலைவர்களும் கலந்து சொற்பொழிவாற்றுவர். மாநாட்டுக்கான வேலைகள் ஹட்டனில் ஜரூரான முறையில் நடைபெற்று வருகின்றன.

## கண்டக்டர் நியமனத்தில் அரசியல் தலையீடு

ஓம்னி பஸ்களுக்கு கண்டக்டர்கள் தேவையென்றும் அதற்கு விண்ணப்பப் பத்திரங்கள் அனுப்புமாறும் சில மாதங்களுக்கு முன்பு பத்திரிகைகளில் விளம்பரங்கள் வந்திருந்தது ஞாபகமிருக்கலாம். இப் பதவிக்கு மூதூரிலிருந்தும் ஏராளமான வாலிபர்கள் விண்ணப்பம் செய்திருந்தனர்.

தகுதிவாய்ந்தவர்கள் எனக் கருதப்படும் விண்ணப்பதாரர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பதும், அதில் திறமையானவர்களைத் தெரிந்தெடுப்பதும்தான் எங்குமேவுள்ள வழக்கமாகும் இது சாதாரணமாக எல்லா இடங்களிலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது ஆனல் இங்கு நடந்ததோ நேர்மாருனதாகும். ஒரு நாள் மூன்று வலதுசாரி ஆதரவு வாலிபர்களுக்கு நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்ளுமாறு தந்திகள் வந்தன அதுதான் தாமதம் மூதூரிலுள்ள சில எம்.பி மார்கள் அந்த மூன்று வாலிபர்களுடன் சேர்ந்து ஜரூராக வேலைகள் செய்ய ஆரம்பித்தனர். நேர்முகப் பரீட்சைத் திகதி தள்ளி போடப்பட்டது. அந்த மூன்று பேரும் ''ராஜகம்பீரமாக'' நேர்முகப் பரீட்சைக்கு சென்றுவந்தனர் இப் பகுதி தமிழரசு எம். பி-யார் ஒருவரின் அனுசரணையால் இவர்களுக்கு சில 'உபசாரங்கள்' மேலதிகமாகக் கிடைத்தனவாம்.

இதனைக் கேள்வியுற்ற இப் பகுதி முற்போக்கு எண்ணம் படைத்தவர்கள் இந்த பாரபட்சத்துக்கு எதிராக, அதற்கு முடிவு காண கொதித்தெழுந்தார்கள். தொடர்ச்சியாகப் பல நடவடிக்கைகள் எடுத்தனர். அதற்காக வேலை செய்தனர். இதன் விளைவாக பல விதமான மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின.

இதற்கிடையில் முதல் மூன்று வாலிபர்களும் வைத்தியப் பரிசோதனைக்காக மீண்டும் ஒரு தடவை கொழும்பு வந்தனர். இது தமிழரசு எம். பி-யாரின் 'பலத்திற்கும், செல்வாக்கிற்கும்' கிடைத்த புள்ளியெனப் பேசிக் கொள்ளப்பட்டது.

பதில் நடவடிக்கை காரணமாக, விண்ணப்பம் செய்த இளைஞர்கள் பன்னிரண்டு பேருக்கு நேர்முகப் பரீட்சைக்கான அழைப்பு வந்தது. விஷயம் இதோடு முடிந்திருந்தாலாவது ஆறுதலடைந்திருக்கலாம். லோக்கல் எம். பி-மார் தமது 'இளவரசத்துவம்' பழிக்கப்பட்ட வேதனையோடு தமிழரசு எம். பி-யாரை வலம்வந்து பொருமி பொருமி கிடந்தனர். நாம் சிபார்சு செய்யாத பயல்களுக்கு எப்படி நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு வரலாம், அவன்களுக்கு எப்படி வேலை கிடைக்கலாம் என்று கேள்வி மேல் கேட்டு டிரங்கால்களும், டெலிகிராம்களும் அனுப்பினராம். லோக்கல் எம். பி-மாரின் தாபத்தைக் காதில் போட்டுக் கொண்ட அந்த மன்னுதி மன்னர் எம். பி. தமது குட்டி அரசர்களின் கம்ப்ளேண்டுகளைப் பார்த்து அவற்றை நிறைவேற்றி வைப்பதாகவும் கூறினராம். எப்படி இருக்கிறது எம். பி-மாரின் நடத்தை?

மூதூரின் ''தலைமகனுரே'', (அவர்தான் அந்த தமிழரசு மன்னர் எம். பி.) நீர் உமது குட்டி ராஜாக்களின் வார்த்தையைக் காதில் போடுவதால், ஒரபட்சமான முறையில் நடப்பதால் பழைய வாக்குறுதிகளை, ''திறமையுள்ளவர்களுக்குத்தான் முதலிடம்'' என்ற வார்த்தையை மீறுகின்றீர் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவும். அரசியல் லாபங்களுக்காக எதையும் செய்வது உம் கொள்கையா! அவதாரச் சின்னமே எங்கே உமது தேர்தல் கால வாக்குறுதி?

## மாவட்ட சம்பள நிர்ணயகுழு நிறுவுக!

**4000** அடிக்கு மேற்பட்டுள்ள தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களின் சம்பளத்தை நிர்ணயிக்கும் பொருட்டு மாவட்ட சம்பள நிர்ணய குழுவை அமைக்காக் கோரி சி. டி. யூ. எப். பொதுச் செயலாளரும் செங்கொடிச் சங்கத் தலைவருமான தோழர் என். சண்முகதாசனும், தோழர் என் நாராயணனும் (தேயிலை உற்பத்தித் தொழில் சம்பள நிர்ணய சபையிலுள்ள எமது பிரதிநிதிகள்) சம்பள நிர்ணய சபைத் தலைவருக்குப் பின் வரும் பிரேரணை அடங்கிய கடிதத்தை அனுப்பியுள்ளனர்.]

''பின்வரும் பிரேரணையை விவாதிப்பதற்கு சம்பள நிர்ணய சபையின் விசேஷக் கூட்டமொன்றைக் கூட்டவும். 14-9-66-ல் கூட்டத்தில் இப் பிரேரணையை நாம் விவாதிக்க விரும்புகின்ருேம்.

''சம்பள நிர்ணய சபைச் சட்டத்தின் 18 (1) விதிப் பிரகாரம் இச் சம்பள நிர்ணய சபை 4000 அடிக்கு மேல் உயரேயுள்ள தோட்டங்களில் தேயிலை உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் சம்பளத்தை நிர்ணயிக்கும் மாவட்ட சம்பள நிர்ணய குழுவை ஏற்படுத்துகின்றது.''

இப் பிரேரணைக்கு ஆதரவாக நாம் பின்வரும் காரணங்களை முன்வைக்கின்ருேம்.

இன்றுள்ள சம்பள நிர்ணய சபையின் அதிகாரத்தில், தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு கோரிய சகல தீர்மானங்களையும் முதலாளிகள், தேசிய ரீதியான தராதர விற்பனை விலையைக் காட்டி நிராகரித்துள்ளனர். குறைவாக உள்ளதெனக் கருதப்படும் தேசிய அல்லது அகில இலங்கை ரீதியான விற்பனை விலைகள், உயர் மலைப் பிரதேசங்களிலுள்ள தோட்டங்களில் உற்பத்தியாகும் தேயிலையின் விற்பனை வி தொடர்ச்சியாக உயர்ந்துள்ளதை மூடி மறைக்கின்றனரென்பது எமது வாதமாகும். இத் தோட்டங்களில் உற்பத்திச் செலவிற்கும், உற்பத்தி வரி செலுத்திய பின் உள்ள விற்பனை விலைக்கும், ஒரு இருத்தல் தேயிலைக்கு ரூபா 1/- முதல் ரூபா 1/75 வரை வித்தியாசம் உண்டு இப்படியான தோட்டங்கள், நாளொன்றுக்கு ஒரு ரூபா சம்பள உயர்வு என்ற எமது சங்கத்தின் கோரிக்கையை இலகுவாகத் தர முடியும்.

ஆகவே, சகல தேயிலை உற்பத்தித் தொழிலாளர்களுக்குமாக இச் சபையில் சமர்பிக்கப்பட்டுள்ள சம்பள உயர்வுக்கான பிரேரணைகளிலிருந்து வேறுபடாமல், 4000 அடிக்கு மேல் உயரமான தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு மாவட்ட சம்பள நிர்ணய குழுவை நிறுவுமாறு நாம் வேண்டுகின்ருேம்.''

## யூ. என். பி. ஆட்சியில் .....

நடப்பு வருடத்தில் சிறு குழந்தைகளுக்கான பால் மா இறக்குமதி செய்ய ஒரு கோடியே அறுபது லட்சம் ரூபாவை வர்த்தக அமைச்சு ஒதுக்கியுள்ளது. ஆனல் உண்மையான மதிப்பீட்டின்படி பால் மா இறக்குமதி செய்ய ஒதுக்க வேண்டிய தொகை 2 கோடியே 60 லட்சமாகும். ஒரு கோடி ரூபாவைக் குறைத்ததன் காரணமாக எதிர்வரும் வருடத்தில் பால் குடிக்கும் பிராயத்திலுள்ள சிறு குழந்தைகளுக்குத் தேவையான பால் மா பெறுவது இந்த வருடத்தைப் பார்க்கிலும் மேலும் கஷ்டமாயிருக்கும். தற்போது நிலவும் பால் மா தட்டுப்பாட்டிலும், விலை உயர்விலும் அகப்பட்டு நசியும் சாதாரண நடுத்தர, ஏழைக் குடும்பத்தினருக்கு இதுஇன்னும் பெரிய அடியாக இருக்கும்.

யூ என். பி. அரசாங்கம் ஒதுக்கியுள்ள இந்த ஒரு கோடியே அறுபது லட்சம் ரூபாவும் பெரும்பாலாக இலங்கையிலுள்ள அந்நிய கம்பனிகளுக்கே செல்லவிருக்கின்றது. இலங்கையில் அந்தளவுக்கு புட்டிப்பால் உற்பத்தியை பெருக்காததாலும், இருக்கும் பால் மா உற்பத்தி கம்பனிகளின் உரிமையும் அந்நியர்களின் கைகளில் இருப்பதாலும், இலங்கைக்கு வெளியே எமது செல்வம் ஓடுவதாலும் நமது நாட்டில் பால் மா தட்டுப்பாடு ஏற்பட்டுவருகிறது. அதேபோல புட்டிப் பாலின் விலையும் அதிகரித்துவருகின்றது. அதுவும் சரியான விலைக்கும் பால் மா கிடைப்பதேயில்லை. கிடைப்பதோ பிளாக் மார்க்கட்டில். அதில் சொல்லும் விலையோ யானை விலை குதிரை விலையாக இருக்கும். நமது நாட்டில் புட்டிப் பால் வாங்குபவர்களில் பெரும்பாலானேர் வசதி குறைந்த நடுத்தரக் குடும்பத்தினரும் தொழிலாளர்களுமாவர். இதனல் பாதிக்கப்படுவதும் அவர்களே.

நடப்பு வருடத்தில் இந்து மகா சமுத்திரத்தில் பெரும் அழுகைக் குரல் கேட்கவிருக்கின்றது ஆமாம்—நம் நாட்டுப் பச்சிளம் பாலகர்கள் பசியால் துடிக்கும் ஓலக்குரலே அது அந்நிய சார்பு யூ. என். பி. இந்த விதமான வேலைகளைத்தானே செய்யும். வேறென்ன செய்யும்?

## வெள்ளவத்தையில் வாசிகசாலை

கடந்த மாதம் 25-ம் திகதியன்று, வெள்ளவத்தையிலுள்ள சி. டி. யூ. எப். காரியாலயத்தில் வெள்ளவத்தை முற்போக்கு வாசிகசாலையின் திறப்பு விழா நடைபெற்றது. வாசிகசாலை தோழர் என். சண்முகதாசனல் குத்துவிளக்கேற்றித் திறந்துவைக்கப்பட்டது.


வெள்ளவத்தை முற்போக்கு வாலிபர் சங்கத்தின் ஆதரவில் இயங்கும் மேற்படி வாசிகசாலையின் திறப்பு விழா வைபவத்தைத் தொடர்ந்து பொதுக் கூட்டமொன்று நடைபெற்றது. அதில் பேசிய தோழர் சண்முகதாசன், ''தொழிலாளர்களின் அரசியல் அறிவை வளர்ப்பதற்கு இந்த வாசிகசாலை ஒரு சிறந்த கருவியாகும். அதிகமான தொழிலாளர்கள் வேலை செய்யும் வெள்ளவத்தை நெசவாலையின் முன்னல் உள்ள இவ் வாசிகசாலை, தொழிலாளர்களிடையே வாசிக்கும் பழக்கத்தைத் தூண்டும்'' என்ருர். இக்கூட்டத்தில் தோழர்கள் ஏ ஜயசூரிய, கே. இராஜமாணிக்கம், ச. தர்மசேன ஆகியோரும்பேசினர். ஏராளமான தொழிலாளர்களும், பொது மக்களும் கலந்துகொண்ட இக் கூட்டத்தின் முடிவில் சீனத் திரைப்படமொன்றும் காண்பிக்கப்பட்டது.

தகவல்: சிவகுரு.

## பாட்டாளி வர்க்க தலைமையை என்றும் மறவோம்

# தொழிலாளர் வர்க்கத்தை நசுக்க யூ.என்.பி-யின் திட்டம்

## முற்போக்கு சக்திகள் ஒன்றுபட்டு எதிர்க்கவேண்டும்



ஹிக்கொட தர்மசேன

(உப-தலைவர் சி. டி. யூ. எப்.)

சில நாட்களுக்கு முன்பு பனாகொடை இராணுவ முகாமிலுள்ள படையினருக்கு இ. போ. ச பஸ்களை ஓட்டுவதற்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. பஸ்களை இராணுவத்தினர் ஓட்டப் பழகுவது உடற்பயிற்சிக்காக அல்ல; அரசாங்கத்திற்குத் தேவைப்படும்போது பஸ்களை ஓட்டுவதற்காகத்தான். அதாவது வேலை நிறுத்தம் நடக்கும்போது அதனை இராணுவத்தினரைக்கொண்டு முறியடிக்கும் நோக்கத்துடன்தான் இவ்விதம் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இது அரசாங்கம், கூட்டுத்தாபனங்கள், தனியார்துறை ஆகியவற்றில் வேலை செய்யும் தொழிலாளர்கள்மீது யூ. என் பி. அரசாங்கம் வருங்காலத்தில் தாக்குதல் தொடுக்கத் தயாராகும் நடவடிக்கையாகும் மேலும் இது, 1956-ல் தொழிலாளர்கள் பெற்ற ஜனநாயக உரிமைகளை மீண்டும் அபகரித்துக் கொள்ள யூ. என். பி அரசாங்கம் மேற்கொள்ளும் கீழ்த்தரமான தந்திரமட்டுமல்ல, தொழிலாளி வர்க்கத்தினர் மத்தியில் வளர்ந்துவரும் போராட்ட உணர்வுகளை மட்டப்படுத்தவுமான முயற்சியுமாகும்.

### பொலிஸ் உதவியாளர்

சென்ற ஜூன் 30-ந் தேதி பொலிஸ் தலைமைக் காரியாலயத்திலிருந்து அரசாங்க இலாகாக்களுக்கும், கூட்டுத்தாபனங்களுக்கும், பல்வேறு தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. அதில் விசேஷ பொலிஸ் உதவியாளர்களின் தொகையை அதிகப்படுத்துவதற்கும், புதிய நபர்களைத் தெரிவு செய்வதற்குமான புதிய வேலைத்திட்டம் அடங்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இ. போ ச-வில் நடப்பதென்னவென்றால், அங்கு வேலை செய்யும் தொழிலாளர்களிலிருந்து, பொலிஸ் உதவியாளர்களாக பொலிஸ் இலாகாவுக்கு விரும்பியவர்கள்தான் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்படுகின்றனர்.

இந்த யூ. என். பி அரசாங்கம் இவ்வளவு விரைவாக பொலிஸ் இலாகாவைப் பலப்படுத்துவது ஏன்? இந்நாட்டிலிருக்கும் திருடர்கள், கொள்ளைக்காரர்கள், சுரண்டுபவர் ஆகியோரிடமிருந்து மக்களைக் காப்பாற்ற அல்ல முதலாளித்துவப் பொருளாதாரத்தால் நசுக்கப்படும் மக்களும் தொழிலாளர்களும், ஸ்தாபன ரீதியாகத் திரண்டு அவர்கள் நடத்தும் போராட்டத்தை நசுக்கவே; முதலாளித்துவச் சுரண்டலை மேலும் பாதுக்காக்கவே.

### ஏன் விளங்கிக் கொள்ளவில்லை?

1961-ம் ஆண்டு இராணுவத்தையும் பொலிஸையும் தொழிலாளர்களுக்குப் பதிலாகப் பிரயோகித்தபோது இலங்கை தொழிலாளி வர்க்கமும், மக்களும் எதிர்த்தனர். அன்று தொழிலாளர்களின் வீரஞ்செறிந்த போராட்டத்திற்கு முழு ஒத்துழைப்பும் அளித்த இலங்கை தொழிற் சங்க சம்மேளனம், எல்லாத் தொழிற் சங்கங்களும் ஐக்கியப்படும்படி அறைகூவல் விட்டபோது, சில தலைவர்கள் கொள்கை வேறுபாட்டின் காரணமாகத் தொழிலாளர்களைக் காட்டிக் கொடுத்தது தொழிலாளர்களுக்கு நன்றாக நினைவிலிருக்கும்.

தொழிலாளி வர்க்கத்தை மிகவும் கீழ்த்தரமான முறையில் நசுக்குவதற்கு தொழிலாளி வர்க்கத்தின் பிரதான விரோதியான யூ என். பி. அரசாங்கம் முன்வந்துள்ள இவ்வேளையில் அவ்விரோதிக்கு எதிராகப் பலம் வாய்ந்த ஸ்தாபனங்களை ஸ்திரப்படுத்திப் போராடுவதற்கு முடியாமலிருப்பது துரதிர்ஷ்டமாகும். தொழிற்சங்க மத்திய ஸ்தாபனங்களில் இருக்கும் பிளவுவாதிகளும், ஐக்கிய விரோதிகளும் அரசாங்கம் எடுத்துவரும் தொழிலாளி வர்க்க விரோத நடவடிக்கைகளை ஏன் விளங்கிக்கொள்ளாமலிருக்கின்றனர்? இராணுவ, பொலிஸ் வீரர்களை உற்பத்தி வேலைகளுக்கும், விநியோக வேலைகளுக்கும், மற்றும் வேலைகளுக்கும் பழக்குவதற்குக் காரணம் என்ன என்பதை ஏன் புரிந்து கொள்ளாமலிருக்கின்றனர்? இராணுவத்தினர் வீட்டில் சும்மா காலம் கழித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காகத்தான் இந்த வேலைகள் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று நினைக்கவேண்டாம். வளர்ந்து வரும் தொழிலாளர்களின் போராட்டத்தையும், பொது மக்களின் போராட்ட உணர்வையும் முறியடிக்கவும், பிற்போக்குவாதிகளுக்கு வெற்றியீட்டிக் கொடுக்கவும்தான் அரசாங்கம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

### ஐக்கியம் அவசியம்

யூ. என். பி-யையும், சகல பிற்போக்கு சக்திகளையும் வீழ்த்துவதற்கு சரியான வழிவகைகளைக் காணாததாலும், யூ. என். பி. எதிர்ப்பு முன்னணியை அமைக்கச் சக்தியிழந்திருப்பதனாலும்தான் மக்களின் பொது எதிரி ஆட்சிக்கு வந்துள்ளான் ஆட்சியிலிருக்கும் பொது எதிரி கேடுகெட்ட தாக்குதல்களையும், செயல்களையும் மக்கள்மீது தொடுப்பதற்கு முன் முற்போக்கு சக்திகள் ஒன்றுபடாமலிருப்பது இந்நாட்டு மக்களின் துர்ப்பாக்கியமாகும்.

சரியான ஒரு வேலைத் திட்டத்தின்கீழ் சகல முற்போக்கு சக்திகளையும் ஐக்கியப்படுத்த இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் எல்லா முயற்சிகளையும் எடுத்துள்ளதைப் பாராட்டத்தான் வேண்டும் பிற்போக்கு சக்திகள் கடுமையான நடவடிக்கைகளின்மூலம் தொழிலாளி வர்க்கத்தை நசுக்குவதற்கு முன்பு எமது ஐக்கியத்தைப் பலப்படுத்திக் கொள்வதற்கும், ஸ்திரப்படுத்திக்கொள்வதற்கும் இது ஒரு நல்ல சந்தர்ப்பமாகவும், பாடமாகவும் அமையும்.

—தமிழில்— நிஹார்.

---

## கோரிக்கைகளை வென்றெடுப்போம் கார்சன் தொழிலாளர்கள் உறுதி

சி. டி யூ எப்-புடன் இணைந்துள்ள தேயிலை, ரப்பர், தெங்கு மற்றும் பொது உற்பத்தித் தொழிலாளர் சங்கத்தின் கார்சன் கம்பர்பட்ச் கிளை, மேற்படி கம்பெனித் தொழிலாளர்களின் பின்வரும் கோரிக்கைகளை முதலாளிமாருக்கு சமர்ப்பித்துள்ளது.

இதுபற்றி அது விடுத்துள்ள ஓர் அறிக்கையில் நாம் சமர்ப்பித்துள்ள இக்கோரிக்கைகள் பற்றி முதலாளிமார் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றும், அவர்கள் கடைப்பிடித்துவரும் போக்கைப்பற்றித் தொழிலாளர்கள் பாரதூரமாகச் சிந்தித்து ஐக்கியத்தோடும், உறுதியோடும் செயலாற்றவேண்டியுள்ளதென்றும் தெரிவித்துள்ளது.

1. வாகனங்களுக்குச் சாமான்களை ஒப்படைப்பவர்களுக்கு (டெலிவரி) அதிகரிக்கப்பட வேண்டிய சம்பளத்தை அளித்தல்.

2. அடையாளமிடுபவர்களுக்கு (மார்க்ஸ்) அதிகரிக்கப்படவேண்டிய சம்பளத்தை அளித்தல்.

3. ஓய்வு பெற்றிருக்கும் பொடிநோனா, பேபி நோனா, பொடி நோனா ஆகியோருக்கு இதுவரை கொடுககாமலிருந்த எகஸ்—கிரேசியா நிதியை கொடுத்தல்.

4. சாம்பிள்காரர்களுக்கு அதிகரிக்கப்படவேண்டிய சம்பளத்தை அளித்தல்.

5 உத்தியோக ஆடை கொடுத்தல்.

6 மரண உதவி நிதியை ரூபா 300/- வரையிலும் அதிகரித்தல்.

7 தோழர் எம். ஏ. மர்ஷோன் அவர்களை மெக்கானிக் பதவிக்கு உயர்த்தல்.

8. தோழர் டப்ளியூ தனபால அவர்களின் தரத்தை உயர்த்துதல்.

9. ஒரு இறுத்தல் தேயிலையை கொடுப்பதற்கு வருகை தந்துள்ள தினத்தைக் கணக்கிடாமையும், மேலதிகமான தேயிலை ஒரு இறுத்தல் அளிப்பதும்

10. புரொவிடண்ட் நிதியை ஆரம்பிப்பதற்கு முன்பு செய்த சேவை காலத்திற்கு ஒரு மாத சம்பளத்தை அளித்தல் வேண்டும்.

11. போயா தினத்திற்கு முந்திய நாளில் இரா வேலை செய்யும் வாட்சர்கள் செய்யும் மேலதிக வேலைக்கு ஓவர்டைம் சம்பளம் அளிததல் வேண்டும்.

## விஜயா ஓட்டுத் தொழிற்சாலையில் வேலைநிறுத்தம்

விஜயா ஓட்டுத் தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளர்கள் மூன்று பிரதான கோரிக்கைகளை முன்வைத்து ஆகஸ்ட் 13-ம் திகதி முதல் வேலை நிறுத்தம் செய்துவருகின்றனர் அவர்களின் கோரிக்கைகள் பின்வருமாறு:-

1. முழுச் சம்பளத்தையும் போனஸாக அளிததல்.
2. சேவைக் காலம் பிரகாரம் சம்பளத்தைக்கூட்டுதல்.
3. வாட்சர்களுக்கு வாரமொன்றுக்கு 45 மணி நேர வேலை அளித்தல்.

இக் கோரிக்கைகளுக்காக வேலை நிறுத்தம் செய்யும் நூற்றுக்குக் கிட்டிய மேற்படி தொழிற்சாலைத் தொழிலாளர்கள் சி. டி யூ எப்-பில் இணைந்துள்ள ஐக்கிய லங்கா ஓட்டு, செங்கல் தொழிலாளர் சங்க அங்கத்தவர்களாவர்.

## விட்டாலில் வெற்றி!

தேயிலை, ரப்பர், தெங்கு மற்றும் பொது உற்பத்தித் தொழிலாளர் சங்கத்தின் விட்டால் பவுஸ்டட் கிளை அங்கத்தவர்கள் கடந்த மாதம் 20-ம் திகதியன்று தமது 10 கோரிக்கைகளை முன்னிட்டு வேலை நிறுத்தமொன்றை ஆரம்பித்தனர் மூன்றரை நாட்கள் நடைபெற்ற இவ்வேலை நிறுத்தத்திற்குக் காரணமான கோரிக்கைகளில் பிரதான கோரிக்கைகள் நான்கை வெற்றி பெற்ற தொழிலாளர் ஜய கோஷத்துடன் வேலைக்குத் திரும்பினர்.

## லீப்ரா தொழிலாளர்கள் கெனமனை உதறினர்

இதுவரையிலும் கெனமனது சீர்குலைவுத் தொழிற் சங்கத்தின் அங்கத்தவர்களாயிருந்த நுகேகொட லீப்ரா இன்டஸ்ட்ரீஸ் தொழிலாளர்கள் அண்மையில் சி. டி. யூ. எப்-பில் இணைந்துள்ள அகில இலங்கை நெசவுத் தொழிலாளர் சங்கத்தின் கொடியின் கீழ் ஒன்று திரண்டுள்ளனர். திரிபுவாதக் கோஷ்டியினர் எல்லாப் பிரச்சினைகளிலும் முதலாளிகளின் பக்கம் நின்றதே இதன் காரணமாகும்.

## வேண்டாம் ஜே. ஆர்.

யூ. என். பி அமைச்சர் ஜே ஆரைத் தலைவராகக் கொண்ட (வி)தேசிய ஊழியர் சங்கத்தின் கீழ் திரண்டிருந்த ஜேம்ஸ் பின்லே கம்பனி லிமிடெட் தொழிலாளர்களும், ஜோர்ஜ் பெய்ன் கம்பனித் தொழிலாளர்களும் தமது அந்நிய சார்பு தலைமையை உதறித் தள்ளிவிட்டு சி. டி. யூ. எப்-பின் புரட்சிகரத் தலைமையை ஏற்று அதன் தலைமையின் கீழ் அணி திரண்டுள்ளனர்.

இவர்கள் தற்போது எமது தேயிலை, ரப்பர், தெங்கு மற்றும் பொது உற்பத்தித் தொழிலாளர் சங்கத்தில் உறுப்பினர்களாகியுள்ளனர்.

## ஷெல்பி தொழிலாளர்கள் சி. டி. யூ. எப்-பில்!

திரிபுவாத கெனமன்-மெண்டிஸ் கும்பலின் சங்கத்தில் அங்கம் வகித்த ஷெல்பி ஸ்டோர்ஸ் தொழிலாளர்கள் சீர்குலைவாளர்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு சி டி. யூ எப்-பில் இணைந்துள்ள தேயிலை, ரப்பர், தெங்கு மற்றும் பொது உற்பத்தித் தொழிலாளர் சங்கத்தில் சேர்ந்துள்ளனர். எம். எஸ் ஹெப்டுலாபாய் கம்பனியின் ஷெல்பி ஸ்டோர்ஸில் பலம் வாய்ந்த சி. டி. யூ. எப். கிளையும் அமைக்கப்பட்டுள்ளது.

# பல்கலைக்கழக மாணவரின் இன்றையப் பிரச்சினைகள்

## எதிர்காலத்திற்கு உத்தரவாதமளிக்கும்பாதைஎது?

**இலங்கைப் பல்கலைக் கழகம் இன்று பிரச்சினைக்குரிய ஸ்தாபனமாகிவிட்டது. அங்கு மாணவர்கள் மத்தியில் நிலவும் அமைதியின்மை பற்றிப் பலர் பலவிதமான அபிப்பிராயங்களைத் தெரிவித்திருக்கின்றனர். முதலாளித்துவப் பத்திரிகைகள் மாணவர்களின் பிரச்சினைகளைத் திரித்தும், குறைத்தும் கூறுவதோடல்லாமல் பொதுமக்கள் மத்தியில் பட்டதாரி மாணவர்கள் பற்றிக் கீழ்த்தரமான அபிப்பிராயத்தையும் ஏற்படுத்திவருகின்றன. தங்களைக் 'கல்விமான்கள்' என்று சொல்லிக்கொள்ளும் சிலர் "இன்றைய பல்கலைக்கழக மாணவர்களில் பெரும்பாலோர் தகுதியற்றவர்கள்" என்று பகிரங்கமாகச் சொல்லித் திரிகிறார்கள். இப்படிச் சொலவதற்கு இந்தக் கல்விமான்களிடத்தில் இருக்கும் ஒரேயொரு தகுதி, அவர்களின் முதிர்ந்த வயது மட்டும்தான். இத்தகைய ஓரவஞ்சகமான வாதங்கள் மாணவர்களை எதிர்நோக்கியுள்ள உண்மையான பிரச்சினைகளை மறைப்பதுடன், அவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கும் மாசு கற்பிக்கின்றன.**

இன்றையப் பல்கலைக்கழக மாணவர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முதலில் வேண்டியது பல்கலைக்கழகத்தில் ஒரு மனோ தத்துவப் பகுதி என்ற சில 'பெரியார்களின்' கருத்துக்கு ஆங்கிலப் பத்திரிகைகள் மிகவும் பிரபல்யம் கொடுத்து வருகின்றன. சமீபத்தில் பல்கலைக் கழக மாணவர்களின் 'மனோ நிலை' பற்றி ஒரு சாதாரண 'மருத்துவர்' தெரிவித்த முடிவு இக் கருத்துக்கு நல்ல ஆதாரமாய் வாய்த்திருக்கிறது. இவரின் முடிவுப்படி பட்டதாரி மாணவர்களில் 10-15% வீதத்தினர் மனோ வியாதியால் பீடிக்கப்பட்டிருக்கின்றனர். இந்த முடிவின் படி பார்த்தால் இலங்கையில் அதிகம் பைத்தியங்கள் நிறைந்த ஒரே இடம் பல்கலைக் கழகமாகும். இது பற்றி மனோ தத்துவப் பேராசிரியர் ஒருவர் பின்பு தெரிவித்த கருத்தை வைத்துப் பார்த்தால் அந்த 'மருத்துவர்' இத்தகைய முடிவுக்கு வரும்போது சரியான மன நிலையில் இருந்தாரா என்ற கேள்விதான் எழுகிறது.

இவர்கள் எல்லோரும் ஒரு வெளிப்படையான உண்மையை மட்டும் கண்டுபிடித்திருக்கிறார்கள். இன்றையப் பட்டதாரி மாணவர்களை எதிர்நோக்கிப் பல பிரச்சினைகள் இருக்கின்றன என்பதையாயினும் இவர்கள் உணர்கிறார்கள். பிரச்சினைகளின் தன்மையைச் சரியாகப் புரிந்தால் மாணவர்களின் பிரச்சினைகளுக்கு மருந்து மனோ தத்துவ நிபுணர்களிடமில்லை என்பதும் புரியும். மருந்தை அளித்திருக்க வேண்டியவர்கள் நம் நாட்டுக் கல்வி நிபுணர்களும், பொருளாதார நிபுணர்களுமாகும்.

### காலனித்துவக் கல்வி முறை

இன்றையப் பட்டதாரி மாணவன் யார்? அவனை எதிர்நோக்கும் பிரச்சினைகள் யாவை? என்ற இரு கேள்விகளையும் ஆராய்ந்தால் தான் சரியான ஒரு முடிவுக்கு வர முடியும்.

சமீப காலம்வரை பல்கலைக் கழகம் ஆளும் வர்க்கத்திற்கு அடிவருடிகளைச் சிருஷ்டிக்கும் ஓர் உற்பத்திச் சாலையாகவே திகழ்ந்தது. வசதியுள்ள வர்க்கத்திலிருந்து சிலரைத் தெரிவு செய்து, காலனித்துவ அடிப்படையில் அவர்களுக்குக் கல்வியூட்டி, மேல் நாட்டுப் பாணியில் அவர்களைச் சீராட்டி அரசாங்கத்தில் உயர் பதவிகளை வழங்கி வந்தது ஆளும் வர்க்கம். இவர்களின் திறமைகள் விலை கொடுத்து வாங்கப்பட்டன. பட்டப் படிப்புக்குப் புகுந்தோரின் திறமையெல்லாம் வெள்ளையனின் ஆட்சி யந்திரம் திருப்திகரமாக இயக்கப்படுவதற்காகப் பணம் கொடுத்து வாங்கப்பட்டது. காலனித்துவ ஆட்சியின் நேரடிக் கைக் கூலிகளான—ஏகாதிபத்திய தாசர்களான—பெரு முதலாளி வர்க்கத்து நாகரிகக் கும்பலின் தனி ஆதிக்கத்தில் தான் தேஸ்டன் வீதியும், பேராதனையுமிருந்தன. சந்ததி சந்ததியாக இந்நாட்டு மக்கள் தேசாபிமான மற்றவர்களாய் ஆங்கில, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கண்ணியம் வாய்ந்த சேவகர்களாய்த் திகழவேண்டுமென்ற கேடுகெட்ட ஒரே நோக்குடன் இயங்கி வந்த மிஷனரிமாரின் பள்ளிக் கூடங்களின் பழைய மாணவர்கள் தான் பல்கலைக் கழகத்தை ஆட்சி செய்தனர்.

### இன்றைய நிலை

1956-க்குப் பின் இலங்கையின் சரித்திரத்தில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டது. சிங்களமும் தமிழும் போதனா மொழிகளாயின. மத்திய, மகா வித்தியாலயங்கள் நாடு பூராவும் திறக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து பல்கலைக் கழகத்தின் கதவுகள் கிராமப்புறத்து விவசாயியின் மகனுக்கும், வருமானம் குறைந்த தொழிலாளியின் மகனுக்கும் திறந்துவிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இன்று பல்கலைக் கழகத்தில் பெரும்பான்மையான மாணவர்கள் தாய் மொழி மூலம் தான் கல்வி கற்கிறார்கள். றோயல், சென் தோமஸ், யாழ்ப்பாணத்துக் கிறிஸ்துவப் பள்ளிகளின் மாணவர்கள் கரண்டியுடனும், முள்ளுக் கரண்டியுடனும் ஆட்சி செய்த பல்கலைக் கழகம் இன்று மாகாணங்களிலுள்ள மத்திய, மகா வித்தியாலய மாணவர்களால் நிரம்பி வழிகின்றது.

> **அரசாங்க மேசையிலிருந்து பேனுபிடிக்க நம் கைகளுக்குச் சந்தர்ப்பம் இல்லையென்றால் அதைவிடச் சிறந்த செயல்களுக்கு, மக்கள் போராட்டத்தின் முன்னணியில் இடமுண்டு.**

பெரும்பான்மையான பல்கலைக் கழக மாணவர்கள் இன்று கீழ் மத்தியதர வர்க்கத்தைச் சார்ந்தவர்களே. முந்திய மாணவர்களைப் போன்று இவர்கள் உயர்ந்த வர்க்கத்தவராயில்லாவிட்டாலும், இம் மாணவர்களின் பெருந் தொகையானோருக்கு முந்திய காலத்துப் பட்டதாரி மாணவர்களைப் பீடித்த சில 'வியாதிகள்' இன்றும் பிடித்துள்ளன. இதற்குப் பூரண பொறுப்பும் அவர்களல்ல. முன்பு இருந்துவந்த அதே காலனித்துவக் கல்வி முறையே இன்றும் இருந்து வருகிறது; பல்கலைக் கழக விடுதிக்குள் நுழைந்ததும் ஒரு ஆடம்பரமான செயற்கை உலகம் ஒவ்வொரு மாணவனையும் வரவேற்கிறது. ஜென்னிங்ஸ் காலத்து மாணவர்கள் விட்டுச் சென்ற விதேசிய பழக்கவழக்கங்களும், அவர்கள் பரப்பிய விதேசிய மனப்போக்கும் இன்னும் அழியவில்லை. நமது சமூகத்தின் மீது கொஞ்சமும் அக்கறை கொண்டிராத ஒரு சாதாரண 'வெள்ளைப் பிராணி' யான ஜென்னிங்ஸ் நமது பல்கலைக் கழகத்தின் முதல் உப-வேந்தரானது ஒரு திட்டமிட்ட சதியாகும் நாட்டுப் பற்றில்லாத முதலாளித்துவ மனப் போக்குள்ள பட்டதாரிகளை உற்பத்தி செய்யும் ஏகாதிபத்தியவாதிகளின் திட்டத்தை வெற்றிகரமாக அமுல் நடத்த உதவியவர்களில் முதல்வர் இந்த ஜென்னிங்ஸ் பல்கலைக்கழக மாணவர் தொகையை அதிகரிப்பதற்குக் கடைசி வரை முட்டுக்கட்டையாக இருந்தவரும் இவரே. தூரதிருஷ்டியின்றி நம் நாட்டு உயர் கல்வியையே நாசமாக்கி, பல்கலைக்கழகத்தின் நோக்கங்களையே மண்ணாக்கிய ஜென்னிங்ஸ் குழப்பிய குட்டை இப்போது மேலும் குழப்பப்பட்டுவிட்டது.

### நூதனசாலை

பட்டதாரி மாணவர்களும், விரிவுரையாளர்களும் ஒதுக்கி உள்ள ஒரு உலகில் வாழ்கிறார்கள். இங்கே கல்வி கற்பவர்கள் ஒரு சுதந்திரநாட்டு மாணவர்கள் கற்கவேண்டிய கல்வியைக் கற்கவில்லை. கற்பிப்பவரோ தான் காலத்துக்கொவ்வாத கல்வியை ஊட்டுவதை உணரவில்லை. இப்பாரதூரமான விஷயங்களை இவர்கள் உணரமுடியாதபடி பல்கலைக் கழகத்துக்கும் சமூகத்துக்குமிடையேயுள்ள பெரும் பிளவு தடுக்கிறது ஒரு சிரேஷ்ட விரிவுரையாளரின் அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளை சமீபத்திலிருந்து கவனித்தால், நம் நாட்டில் விஞ்ஞான ஆராய்ச்சி வளராத காரணமும், மேல் நாட்டு வழக்கங்களை இந்து மகா சமுத்திரத்திலுள்ள இலங்கைத் தீவில் மற்றவர்களுக்கு அறியவைக்கும் ஒரு நூதனசாலையாகப் பல்கலைக் கழகம் திகழ்வதும் புரியும். ஆராய்ச்சி மீது ஆர்வமுள்ள ஒருவருக்குக்கூட ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்குள்ள வசதிகளைவிட ஆடம்பரப் பொழுது போக்கு வசதிகள் அதிகம்! நம் நாட்டுத் திறம் மூளைகள் மிகுந்த பல்கலைக் கழகத்தில், பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத ஆராய்ச்சி ஊக்குவிக்கப்படவில்லை. பொருளாதார வளர்ச்சிக்குகந்த உயர்கல்வித் திட்டம் இன்றுவரை வகுக்கப்படவில்லை.

### பிரச்சினைகளுக்குக் காரணமென்ன?

இன்று பல்கலைக்கழகத்தில் பெரும்பான்மையான நடுத்தர வர்க்கத்து மாணவர்களை, அவர்களின் வீட்டுப் பிரச்சினைகள் அழுத்துவதால்தான் மாணவர்கள் மத்தியில் அமைதியின்மை ஏற்படுகிறது இந்தப் பிரச்சினைகள், முன்பு பல்கலைக்கழகத்தில் எழாமலிருந்த

சண்முகரத்தினம்

தற்குக் காரணம், முந்திய மாணவர்களுக்குப் பொருளாதாரக் கஷ்டங்கள் இல்லாமலிருந்ததுதான் முந்திய அதே பல்கலைக்கழக வாழ்க்கை முறையை இன்று அனுஷ்டிப்பதற்கு இன்றைய மாணவனுக்குப் பண வசதியில்லை.

பல்கலைக்கழகத்துக்குள் மாணவர்களை எதிர்நோக்கும் பிரச்சினைகள் எல்லாமே பொருளாதாரப் பிரச்சினைகளே இவற்றிற்கு ஒரு மனோதத்துவ நிபுணரால் தீர்வு கண்டுவிடமுடியாது. மந்திரத்தால் மாங்காய் பெற முயற்சிப்பது போலத்தான் இதுவும். விடுதிப்பணம் கட்ட வழியில்லை, வசதிகளிலுள்ள இடங்களிலோ கட்டணங்கள் மிக உயர்வு, விடுதி வழங்கப்படாத மாணவர்களுக்கு தேநீர் அருந்துவதற்கு ஒரு சிற்றுண்டிச் சாலையில்லை, மருத்துவ வசதிகளில்லை இருக்கும் வீடுகளின் வாடகைகளைக் கட்டுப்படுத்த எவருமில்லை, நூல்நிலயத்தில் இடவசதியில்லை, போதியளவு சிங்கள-தமிழ் நூல்களில்லை, புத்தகங்களை விலைகொடுத்து வாங்கப் பணமில்லை, நல்ல உடைகள் வாங்கக் காசில்லை, இதனால் நன்றாக உடுத்திக் கொள்ளமுடியவில்லை. இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் மனோதத்துவ நிபுணர் என்ன வழியைக் காட்டுவார்? ''புத்தகங்கள் இல்லாவிடில் படிப்பைவிட்டு விடு, உடைகள் இல்லாவிடில் உடையணிவதை விட்டுவிடு, பணமில்லாவிடில் பட்டத்தையே மறந்துவிடு'' என்ற வழியையா காட்டுவார்?

### வேலையில்லாத் திண்டாட்டம்

இந்தப் பிரச்சினைகள் எங்கிருந்து முளைவிடுகின்றன? இவையனைத்தும் மாணவர்களின்

—6-ம் பக்கம் பார்க்க

## வெகுஜனங்களிடமிருந்து வெகுஜனங்களுக்கு

வெகுஜனங்களின்மீது நம்பிக்கைவைப்பது, அவர்களைச் சார்ந்து நிற்பது, துணிகரமாக அவர்களை எழுப்பிவிடுவது, அவர்களின் முன்முயற்சிக்கு மதிப்பளிப்பது-இவைதான் மகத்தான கலாசாரப் புரட்சியின் வெற்றிக்கானதிறவுகோல். ''வெகுஜனங்களிடமிருந்து வெகுஜனங்களுக்கு'' என்ற வழியில் விடாமுயற்சியுடன் ஊன்றி நிற்பது அத்தியாவசியமாகும். வெகுஜனங்களின் ஆசிரியர்களாகுமுன் அவர்களின் மாணவர்களாக இருங்கள். குழப்பத்திற்குப் பயமடைந்துவிடாதீர்கள். முதலாளித்துவ நிலையை எடுப்பதையும், வலதுசாரிகளைக் காவல்புரிவதையும் இடதுசாரிகளைத் தாக்குவதையும், மகத்தான பாட்டாளி வர்க்க கலாசாரப் புரட்சியை அடக்குவதையும் எதிர்த்து நில்லுங்கள். வெகுஜனங்களின் கைகளைக் கட்டுவதற்கான அதிகமான கட்டுப்பாடுகளை எதிர்த்து நில்லுங்கள். பெரும் பிரபுக்களாகவோ, அல்லது வெகுஜனங்களுக்கு மேலாகவோ கண்மூடித்தனமாக அவர்களுக்குக் கட்டளை பிறப்பித்துக் கொண்டு நில்லாதீர்கள். புரட்சிகர இடதுசாரிகளுக்கு உற்சாகமிக்க ஆதரவு தாருங்கள். ஐக்கியமாகக் கூடிய அனைவருடனும் ஐக்கியத்தை ஏற்படுத்துங்கள்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி.

# நிரூபிக்க முடியுமா? ருஷ்யாவுக்கு சீன சவால்

சீன வழியாக வட வியட்நாமுக்குச் செல்லும் ரஷிய ராணுவ உதவிக்கு இடையூறு விளைவிப்பதாகச் சீனவை எதிர்த்து சோஷலிஸ்ட் நாடுகளிலும், வட வியட்நாமிலும் பிரச்சாரம் செய்வதை நிறுத்துமாறு சீன மாஸ்கோவைக் கடுமையாக எச்சரித்துள்ளது.

சீன விரோதக் குற்றச்சாட்டுகளை நிரூபிக்குமாறு ருஷ்யாவுக்குச் சீன சவால் விட்டுள்ளதோடு, நிரூபிக்கத் தவறினல் ரஷியா இரட்டை வேடம் போடுவதாகவும், சீனவுக்கும் வட வியட்நாமிக்குமிடையே பிளவை உண்டாக்க முயற்சிப்பதாகவும் கருதப்படும் என சீன கூறியது.

அமெரிக்க ஆக்கிரமிப்பை முறியடிக்க மாஸ்கோ உண்மையில் விரும்பினல் போர்ச் சாதனங்களை அனுப்பச் சீன உதவியை அது நாடவேண்டிய அவசியமில்லை. தங்கள் கப்பல்களில் அவற்றை அனுப்பலாம் என்று சீன கூறியது.

ஹனேய்க்கு யுத்த தளவாடங்கள் அனுப்ப 1700 வாகன்களைத் தயாராக வைத்திருக்குமாறு சீனவை ரஷியா சமீபத்தில் கேட்டிருந்ததாகவும், ஆனல் 500 வாகன்கள்தான் உபயோகப் படுத்தப்பட்டதாகவும், மற்றவை சும்மா கிடப்பதாகவும் சீன ஆட்சேபம் தெரிவித்துள்ளது

1964—65-ல் ரஷியா வட வியட்நாமுக்கு 42,000தொன் போர்ச் சாதனங்களை அனுப்பியதாகவும், அதே காலத்தில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும், மத்திய கிழக்கு நாடுகளுக்கும் அது 2 லட்சம் தொன் ராணுவ மற்றும் சாதனங்களை அனுப்பியதாகவும் சீன குறிப்பிட்டது. ஹனேய் பற்றித் தனது கொள்கையைத் திட்டவட்டமாக விளக்குமாறு ரஷியாவை அது கோரியது. சர்வதேசக் கம்யூனிஸ இயக்கத்தின் நலனுக்குத் தீங்கு செய்யும் இரட்டை வேடப் போக்கை நிறுத்துமாறும் சீன தெரிவித்தது.

## எந்நாளோ?

மலம் எடுக்கும் மாரி காளி
மரமேறும் மரியான் வேலன்
கலம் சமைக்கும் கந்தன் பொன்னன்
கல் செதுக்கும் கதிரவேல் கணபதி
சாலை அமைக்கும் சங்கரன் சந்தியான்
சாக்கடை கழுவும் சாத்தான் காத்தான்
சேலை வெளுக்கும் சின்னன் சித்திரன்
'சிகை' வெட்டுல் சொமாலை செந்திவேல்
இன்ன பிறவோரை இம்சித்து வஞ்சித்து
'இணையிலா வாழ்வு' வாழும்
இரக்கமற்ற அரக்கரை
இல்லா தொழிக்கும் நாள் எந்நாளோ?

-எஸ். ஆறுமுகம்.

# துரோகி எனத் துரத்தப்பட்டவன்

## சோவியத் கண்ணில் நிரபராதி!

இரண்டாம் உலக யுத்தத்தின்போது பாசிஸத்திற்கெதிரான மக்கள் யுத்தத்தின் போது படையை விட்டோடிய ரெ ஹென்ரி செசிம் என்பவன் துரோகி எனக் கருதப்பட்டு, மனைவியினலும், மகளாலும் வெறுத்தொதுக்கப்பட்டு துரத்தியடிக்கப்பட்டதாக ''ஜட்'' என்னும் சோவியத் பத்திரிகை 13-8-66-ல் செய்தியொன்றை வெளியிட்டுள்ளது. இவ்வளவு காலமும் செசிம் ஒளிந்திருந்துவிட்டு இப்போது தலைகாட்டியபோது அவனது மனைவியும் மகளும் துரத்தியதோடல்லாமல் பொலிசுக்கும் தகவல் கொடுத்தனர்.

ஆனல் சோவியத் அரசாங்கமும் சோவியத் கட்சியும் வேறு விதமாக யோசித்தது. அவர்களுக்கு யுத்தம் (சகல விதமான யுத்தங்களும்) தேவையற்றது. எனவே, படையை விட்டோடியது நற்செய்கையாகும். சமாதான சகஜீவனம் என்ற கொடியின் கீழ் அடிபணிதல் தத்துவமாகப் போதிக்கப்படும்போது படையை விட்டோடியவனை எப்படித் தண்டிக்க முடியும்? ஆகவே அவர்கள் செசிமை நிரபராதியாக்கியுள்ளனர். இவன் இனிமேல் சோவியத் மக்களால் பின்பற்றப்பட வேண்டியஓர் உதாரபுருஷனும்!

# எதிரியின் நூல்களுக்கு ருஷ்யாவில் இடம்

இன்று, சோவியத் ருஷ்யாவில் நுட்யாட் கிப்பிளிங்குடைய எழுத்துக்களுக்குமதிப்பு ஏற்பட்டுள்ளது. நுட்யாட் கிப்பிளிங் ஒரு தீவிரமான ஏகாதிபத்தியவாதி. குறிப்பாக காலனி நாட்டு மக்களுக்கும், பொதுவாக உலக மக்களுக்கும் ஏகாதிபத்திய சார்பு மனப்பான்மையைப் பரப்புவதே அவருடைய விசேஷ வேலை.

''காட்டுமிராண்டித்தனமான வாழ்க்கையை நடத்தும் கிழக்கத்திய மக்களை நாகரிகப்படுத்துவதற்காகத்தான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் கிழக்கில் தனது ஆதிக்கத்தைச் செலுத்துகிறதே தவிர, திருடும் நோக்கத்துடனே, சுரண்டும் நோக்கத்துடனே அல்ல'' என்று தனது எழுத்துக்கள் மூலம் உலகுக்கு விளக்கம் கொடுத்த பேர்வழி இவர்.

''கறுப்பர்கள் வெள்ளையரின் சுமை'' என்பது இவருடைய கருத்து. கிழக்கத்திய மக்கள் பின் தங்கியவர்கள், தம்மைத் தாமே ஆட்சி செய்யத் தகுதியற்றவர்கள். ஆதலால் ஆளுவதற்கென்றே பிறந்த — முன்னேற்றமடைந்த— மேற்கத்திய உலகம்தான் அவர்களை நிரந்தரமாக ஆளவேண்டியிருக்கிறது'' என்ற மாயையைப் பரப்பிய தரங்கெட்ட கனவானும் இவரே.

இவரைப் பொறுத்தவரை ''கிழக்குக் கிழக்குத்தான், மேற்கு மேற்குத்தான். இரண்டும் ஒருபோதும் சமமாகாது. கிப்பிளிங்கின் எழுத்துக்களால் கிழக்கத்திய மக்கள் அவமானப்பட்டதுபோல்—மிகவும் தாழ்த்தப்பட்டபோது போல்—அவர்கள் என்றுமே அவமானப்பட்டதுமில்லை; தாழ்த்தப்பட்டதுமில்லை.

இப்பேர்ப்பட்ட தீவிர ஏகாதிபத்தியவாதியின்—தீவிர பிற்போக்குவாதியின் எழுத்துக்கள்தான் சோவியத் மக்களுக்கு மேலும் மேலும் வாசிக்கக் கொடுக்கப்படுகின்றன!

இந்த வருடம் நடந்த சோவியத் கட்சிக் காங்கிரஸுக்கு முன்னதாக கிப்பிளிங்குடைய எழுத்துக்களை சோவியத் வாசகர்களுக்குக் கொடுப்பதால் ஏற்படும் பலாபலன்களைப் பற்றி பல சோவியத் சஞ்சிகைகள்மூலம் விவாதங்கள் நடைபெற்றன. கட்சிக் காங்கிரஸ் நடந்துகொண்டிருக்கும்போதே, உலகின் நன்மைக்காக, முதலாளித்துவ—உருக்குலைந்த—இலக்கியங்கள் துணிகரமாகக் கண்டிக்கப்பட்டன. காரசாரமாகத் தாக்கப்பட்டன.

ஆனல் காங்கிரஸ் முடிவடைந்த உடனேயே கிப்பிளிங்கின் எழுத்துக்கள் விசேஷ பிரசுரங்களாக பல சோவியத் மொழிகளில் வெளிவரத் தொடங்கிவிட்டன. கிப்பிளிங்கின் எழுத்துக்கள் சோவியத்தில் விரும்பப்படுவது, சோவியத் ருஷ்யாவுக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் உள்ள இணைப்பை எடுத்துக் காட்டுகின்றது. அதுமட்டுமல்ல, இதற்கும் மேலாக, சோவியத் தலைமை கிழக்கத்திய மக்களையும், அவர்களது விடுதலைப் போராட்டங்களையும் எவ்வளவு வெறுப்புடன் நோக்குகின்றது என்பதை இந்த நிலைமை தெளிவாகக் காட்டுகின்றது.

## அமெரிக்காவின் பீதி

சீன அணு ஆயுதங்களைத் தயாரித்து வருகிறது. ஏவுகணைகளைக் கொண்ட படையைக் கூட அது உருவாக்கலாம் என அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் மக்னமாரா கூறினர், அவர் மேலும் இதுபற்றித் தெரிவித்தபோது, இன்னும் 10 ஆண்டுகளில் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் அஸ்திரங்களின் மூலம் அமெரிக்காவைத் தாக்கும் சாத்தியமான நிலையைச் சீன அடையலாம் என்ருர்.

# "சண்டைக் கழுத"

அமெரிக்க இராஜாங்கக் காரியதரிசி டீன் ரஸ்க் ஒரு ''சண்டைக் கழுகு'' என்றும் எனவே அவரைப் பதவியிலிருந்து இறக்கிவிட வேண்டும் என்றும் செனட்டர்களே வற்புறுத்துகின்றனர்.

வியட்நாமின் ராணுவ சூனியப் பகுதியில் நடந்த தாக்குதலைப்பற்றி நடந்த பேட்டி ஒன்றில் வட வியட்நாம்மீது அமெரிக்க படையெடுக்க விரும்பவில்லை. ஆனல் தன் படைகளின் பந்தோபஸ்தை உறுதி செய்வதற்கு ஸ்தல கமாண்டர் இதையெல்லாம் செய்யவேண்டியிருக்கிறது என்று ரஸ்க் சமாதானம் கூறினராம். இது வட வியட்நாமுக்குள் புகுந்து தாக்குவதிலும், சீனவுடனும் மோதுவதிலும் கொண்டுபோய் விடும் என்று சொல்லி செனட்டில் யங் என்பவர் கண்டித்தார்.

## அமெரிக்க விசாரணையில் மோதல்

அமெரிக்காவின் வியட்நாம் போரை எதிர்க்கும் அமெரிக்கர்களை விசாரணை செய்வதற்காக அமெரிக்க பிரதிநிதி சபை ஒரு கமிட்டியை நியமித்துள்ளது. இக்கமிட்டியின்முன் வியட்நாம் போரை எதிர்ப்பவர்கள் வாக்குமூலமளித்தபோது விசாரணைக்குழுவினருக்கும், சாட்சியமளிப்போருக்குமிடையே பெரும்மோதல் ஏற்பட்டது. இதன் விளைவாக சாட்சியமளித்தோரில் ஆர்தர் கினய் என்பவர் காவலாட்களால் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளப்பட்டார். இம்மாதிரி அவரை நடத்தியதை ஆட்சேபித்து சாட்சியமளிப்போரின் சார்பில் வந்திருந்த வழக்கறிஞர்கள் வெளியேறினர். கினயைப் பொலிசார் காவலில் வைத்தனர். 20டொலர் அபராதம் கொடுத்த பிறகு மீண்டும் அவர் சாட்சியமளிக்க அனுமதிக்கப்பட்டார். யுத்த எதிர்ப்புச் சாட்சியங்களைக் கேட்டு கரகோஷம் செய்த பார்வையாளரும் வெளியேற்றப்பட்டனர்.

தொழிலாளி

# மோசடிக்காரன் வால்கொட்

## உலக வங்கியின் ஆதரவு

டானியல் வால்கொட் என்னும் அமெரிக்கன் சர்வதேச மோசடிக்காரன்; கள்ளக்கடத்தல் பேர்வழி. பல நாட்டு அரசாங்கங்களை ஏமாற்றித் திரிந்தவன். இவன் ஒரு தடவை தனி விமானத்தில் அனுமதியில்லாமல் இந்தியாவில் வந்து இறங்கினான். இதனை அறிந்த இந்திய அதிகாரிகள் அவனைப் பிடிக்க முயற்சித்தபோது அவர்களுக்கு டிமிக்கி கொடுத்துவிட்டுத் தன்னுடைய விமானத்திலேயே கம்பி நீட்டிவிட்டான்.

அதோடு இவன் நின்றுவிடவில்லை திரும்பவும் தனது மோசடி வேலைக்காகக் கள்ளப் பாஸ் போர்ட்டுடன் இந்தியாவக்குள் நுழைந்தான். ஆனால் இந்தத் தடவை அகப்பட்டுக் கொண்டான். இவனைப் பிடித்து வழக்குக்காகச் சிறைக் காவலில் வைத்தபோது இவன் தப்பியோட முயற்சித்தான். பலிக்கவில்லை. திரும்பவும் இவன் பிடிபட்டு பலத்த காவலில் வைக்கப்பட்டுள்ளான் இப்போது. பிரயாணப் பத்திரங்களில் கள்ளக் கையெழுத்துப் போட்டது. ஏமாற்றியது ஆள்மாறாட்டம் செய்தது என்ற குற்றச்சாட்டுகளின் இவன் சென்னைக் கோர்ட்டில் விசாரிக்கப்பட்டுவருகிறான். சிறையிலிருந்து தப்பி ஓட முயற்சித்ததற்காகவும் வழக்கு நடந்தது அதுமட்டுமல்ல, டிரான்ஸ் ஏர்லைன்ஸ் என்னும் ஸ்தாபனத்தின் தலைவன் என்று தன்னைக் கூறிக்கொண்டு பெருமளவு ஏமாற்றியதாகவும், இவன் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது இந்த அமெரிக்கன் ''பகிரங்கப்பட்ட குற்றவாளி'' என டில்லி மாஜிஸ்திரேட் ஒருவர் பிரகடனப்படுத்தியுள்ளார்.

இந்தப் பெரிய மோசடிக்காரனைப் பற்றிய மற்றொரு ருசிகரமான செய்தி என்னவென்றால், உலக வங்கியின் தலைவரான ஊஜீன் பிளாக், வால்கொட்டை இந்திய வர்த்தகத் துறையினருக்கு அறிமுகப்படுத்தியதுதான். வளர்ந்துவரும் புதிய நாடுகளில் இத்தகைய மோசடிகளையும், ஏமாற்று வேலைகளையும் நடத்துவதற்கே உலக வங்கி உண்டாக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிந்தவர்களுக்கு இச்செய்தி ஆச்சர்யத்தைத் தராது.

நமது நாட்டை உலக வங்கி பாதுகாக்கின்றதென எண்ணுபவர்களின் கண்கள் திறப்பதற்கு வால்கொட் வழக்கு வழிகாட்டவேண்டும். உண்மையில் நமது நாட்டை யூ. என். பி அரசாங்கம் உலக வங்கியிலுள்ள அமெரிக்க முதலாளிக்கு விற்றுவிட்டது.

# தூள் தூளாக்குவோம்!

தென் வியட்நாமில் உள்ள எதிரிகளின் தளம் எதுவுமே பாதுகாப்புடன் இருக்கமுடியாது என தென் வியட்நாம் தேசிய விடுதலை முன்னணிப் படையினர் (வியட் கொங்) எச்சரித்துள்ளனர்.

எதிரிகளின் தளங்கள் முட்கம்பிகளினால் பாதுகாக்கப்பட்டிருந்தாலும் சரி, இரவுபகலாக ஆயுதந்தரித்த படைகளினால் காவல் செய்யப்பட்டாலும்சரி அவற்றைத் தூள் தூளாக்கும் எமது திட்டத்தை எந்த சக்தியுமே தடுத்துவிட முடியாது என்று மேலும் அவர்கள் தெரிவித்தனர்.

### அமெரிக்கக் கொள்கையால்

# அணுகுண்டு யுத்தம் மூளும்

—சுகர்னோ

ஓகஸ்ட் 17ந் தேதி நடந்த இந்தோனேசிய சுதந்திர தினக் கொண்டாட்டத்தின்போது, பத்து இலட்சம் மக்கள் மத்தியில் பேசிய ஜனாதிபதி சுகர்னோ அமெரிக்காவின் வியட்நாம் கொள்கையை மிக வன்மையாகக் கண்டித்தார். அங்கு நடைபெறுவது அமெரிக்க யுத்தம் என வர்ணித்த அவர், அமெரிக்கர் அங்கிருந்து வெளியேறிவிட வேண்டுமென்று வற்புறுத்தினர்.

வியட்நாமில் அமெரிக்க ஏகாதிபத்தியம் மக்களைக் கொன்று குவிக்கிறது, தீவைக்கிறது, குண்டு வீசுகிறது, நச்சுப் புகையைப் பரப்புகிறது. அங்கு இழைக்கப்படும் இக்குற்றங்களை எதிர்க்க சமாதானப் பற்றுள்ள மக்களும், நாடுகளும் ஒன்றுபடாவிடில் இன்னும் விரிவான பயங்கரமான யுத்தத்தை மக்கள் அனுபவிக்க வேண்டி வரும். கண்டத்திலிருந்து கண்டம் பாயும் ஏவுகணைகளின் உதவியுடன் அணுகுண்டு யுத்தம் நடைபெறக்கூடும் என்று அவர் எச்சரித்தார்.

அமெரிக்கக்கொள்கைமூலம் வியட்நாம் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது என்று கூறிய அவர், அங்கு செம்மையாக உதைபட்டு நலிந்து போகப்போவது நீங்கள்தான் உலக யுத்தம் வந்தால் அதற்கு நீங்கள்தான் பொறுப்பு என அமெரிக்கரை எச்சரித்தார்.

## அமெரிக்கப் பொருட்கள் பகிஷ்காரம்

### அமெரிக்கர் சமாதானக் குழு தீர்மானம்

வியட்நாமில் அமெரிக்கா நடத்திவரும் அக்கிரமமான யுத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக உலகம் முழுவதும் அமெரிக்க உற்பத்திப் பொருட்களுக்கு எதிராகப் பகிஷ்கார இயக்கமொன்றை ஆரம்பிப்பதென அமெரிக்க சமாதானப் பிரியர்கள் குழுவினர் தீர்மானித்துள்ளனர்.

வியட்நாமில் அமெரிக்கக் கொள்கை எதிர்ப்போரின் ஜப்பான்—அமெரிக்க மாநாடொன்றுக்காகக் கடந்த வாரம் டோக்கியோவுக்கு வந்திருந்த இச்சமாதானக் குழுவினர் வியட்நாமில் அமெரிக்கக் கொள்கையை எதிர்த்து அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பான் ஆகிய இடங்களில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்போவதாகவும் தெரிகிறது.

## வட வியட்நாம்மீது படையெடுக்க அமெரிக்கா திட்டம்

தென் கிழக்காசியாவுக்கு மிகப் பெரிய அளவில் படைகளை அனுப்புவதற்கு ஜோன்சன் அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாகவும், அதற்கு மக்களைத் தயார்படுத்தும் நோக்கத்துடன்தான் போர் முனைச் செய்திகளையும், எதிர்காலத் தேவைகளையும் உருவாக்கி அனுப்பி வருவதாகவும் செனட்டர் வெயின்மோர்ஸ் குற்றம் சாட்டியுள்ளார் வட வியட்நாம்மீது படையெடுப்பதற்கு இது முன்னோடி என்றும் அவர் தெரிவித்தார். ஏழரை இலட்சம் அமெரிக்கத் துருப்புக்கள் அங்கு இருந்தால் ஐந்து வருடங்களில யுத்தத்திற்கு முடிவு கட்டலாம் என்று வியட்நாமில் உள்ள அமெரிக்கத் தளபதி வாலஸ் கருதுவதையும் சுட்டிக்காட்டினார் செனட்டர் மோர்ஸ்.

நவம்பரில் அமெரிக்கக் காங்கிரஸ் தேர்தல் வருகிறது அதைக் கருத்திற்கொண்டு நம்பிக்கை தரக்கூடிய வகையில செய்திகள் உருவாக்கப்படுகின்றன. ஆனால் உண்மை இதற்கு எதிர்மாறானது என்றார் அவர்.

4-ம் பக்கத் தொடர்

குடும்பங்களைச் சூழ்ந்திருக்கும் வறுமையின் விளைவுகளே. இத்தனை கஷ்டங்களையும் பொருட்படுத்தாது, ஒரு மாணவன் படிக்க நினைத்தாலும், அவன் நினைவிலிருக்கும் இன்னொரு பீதி அவனுடைய மன அமைதியையே கெடுத்துவிடுகிறது. இங்கு படும் கஷ்டங்களெல்லாம் பயனற்றவையாகிவிடுமோ என்ற ஒரு கேள்விக் குறிதான் அது. பல்கலைக்கழக மாணவரின் அமைதியின்மை உச்சகட்டத்தை அடைவதற்குக் காரணமே, எதிர்காலத்தின் உத்தரவாதமற்ற நிலைமையைப் பற்றிய பயம்தான். இது நியாயமான பீதியாகும் இதனால் மாணவர் மத்தியில் அமைதியின்மை ஏற்படுவதும், அது ஒரு பெரும் கொந்தளிப்பாக மாறுவதும் தவிர்க்க முடியாதவையாகும். பொருளை விலைகொடுத்து வாங்குவது போல் பட்டதாரியின் திறமையையும் ஆளும் வர்க்கம் விலைகொடுத்து வாங்கிவந்தது இன்றோ ஆளும் வர்க்கத்தின் தேவைக்கு அதிகமாக மிஞ்சிவிட்டன பொருட்கள் ஆகவே பட்டதாரியின் திறமைகூட விலைமதிப்பில்லாது போய்விட்டது பட்டதாரிகளின் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு இதுதான் காரணம்.

### விசித்திர நிலைமை

படித்துப் பட்டம் பெற்று வேலை தேடும்போதுதான், நாட்டுக்குதவாத ஒரு ஏட்டுக் கல்வித் திட்டத்திற்கு தான் பலியாகிவிட்டதை பட்டதாரி உணர்கிறான். நம்நாட்டின் விசித்திர நிலைமையைச் சுருக்கமாகச் சொன்னால், இங்குபடித்தவர்களுண்டு; ஆனால் அவர்களின் படிப்புக்கேற்க வேலைகளில்லை. வேலைகளுண்டு; ஆனால் அந்த வேலைகளுக்கேற்ப படித்தவர்களில்லை! இது யாருடைய குற்றம்? இதற்கு மருந்து மனோதத்துவமா? உண்மையில் மனோதத்துவ நிபுணர்களைக் காணவேண்டியவர்கள் ஆட்சியிலிருப்பவர்கள்தான்? மாணவர்களுக்கு மனோவியாதிஎன்று சொல்லி முதலாளித் வம்தப்பித்துக்கொள்ளப்பார்க்கிறது. தனது தாயாரினதும், சகோதரிகளினதும் நகைகளை விற்று, காணிகளை ஈடுவைத்து, அநியாய வட்டிக்குக் கடன் வாங்கிப் பல சிரமங்களுக்கிடையில் படித்துப் பட்டம் பெறும் மாணவனுக்கு முதலாளித்துவம் சூட்டும் பட்டம் ''அரைப் பைத்தியம்'' ஏனெனில் அவனை மனோதத்துவ நிபுணரிடமல்லவா போகச் சொல்கிறது! ''மாணவர்களுக்கு மனோதத்துவ வைத்தியம்'' என்பது அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் உபகாரச் சம்பளம் பெற்றுப் படித்த பேராசிரியர்கள் அங்கு மனனம்செய்த ஒருபதமாகும். பாலுணர்ச்சி மிருகத்தனமடையும் அமெரிக்கப் பல்கலைக்கழகங்களுக்கு மனோதத்துவ நிபுணர்களுக்கு வேண்டியிருக்கலாம். ஆனால் நமது பல்கலைக்கழகத்தில் பிரச்சினை 'பால்' பற்றியதல்ல.

### முதலில் செய்யவேண்டியது என்ன?

அடுத்த வருடம் சுமார் ஐயாயிரம் சிங்கள-தமிழ் பட்டதாரிகள் வேலையின்றி இருப்பார்கள். லட்சக்கணக்கான வேலையற்ற மற்றைய இளைஞர்களுமிருப்பார்கள். இந்தப் பிரச்சினைக்கு முடிவேயில்லையா?

இந்த நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் தீருவதற்கு முதலில் வேண்டியது நாம் ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து பொருளாதார விடுதலை பெறவேண்டியதாகும். நம் நாட்டுப் பொருளாதாரம் ஒரே நிலையில் ஸ்தம்பித்து நிற்கிறது. இந்த நிலைமைக்குக் காரணம், நம்நாட்டுப் பொருளாதாரம் ஏகாதிபத்தியத்தின் பிடியில் சிக்கியிருப்பதுதான். தேயிலையும் றப்பரும் நமக்கு வருமானத்தைத் தரும் ஏற்றுமதிப் பொருட்கள். ஆனால் நம் தோட்டங்களும், வர்த்தகமும், அந்நியரின் உடைமைகள். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வசதிகள் ஏற்படுத்தப்படவேண்டும். இதற்குப் பல துறைகளிலும் பொருளாதாரத்தை விரிவடையச் செய்யவேண்டும். இத்தகைய ஒரு அபிவிருத்தியே பொருளாதார வளர்ச்சியைக் குறிக்கும். இதை ஏற்படுத்துவதற்கு நமது தற்போதைய பொருளாதாரத்தின் முழுப்பயனையும் நாம் அடையவேண்டும். எனவே, முதலில் இங்குள்ள அந்நியரின் சொத்துக்கள் நமதாக்கப்படவேண்டும்.

பல்கலைக் கழகக் கல்வி நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான வல்லுநரை உற்பத்தி செய்வதையே நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். இதைப் பற்றிச் சுருங்கச் சொன்னால் பல்கலைக் கழகக் கல்வி முறையில் பரிபூரண மாற்றம் ஏற்படவேண்டும்.

### போராட்டத்தின் முன்னணியில் இடமுண்டு

வேலையில்லாத இந்நாட்டுப் பட்டதாரியும் மற்றைய படித்த இளைஞர்களும் 'வேலை கிடைக்கும்' என்ற உத்தரவாதத்துடன் கல்வி கற்கும் சோஷலிஸ நாட்டு மாணவர்களை மனதில் கொள்ளட்டும். அவர்களுக்குச் சுதந்திர வாழ்வையளித்திருக்கும் சமதர்ம தத்துவத்தை உணரட்டும். இந்நாட்டு மாணவர்களுக்குப் பூரண சுதந்திரம் இன்றைய ஆட்சியினுடைய யந்திரத்தின் முடிவில்தான் என்பதையும் தெரிந்து கொள்ளட்டும்.

அரசாங்க மேசையிலிருந்து பேனா பிடிக்க நம் கைகளுக்குச் சந்தர்ப்பமில்லையென்றால் அதைவிடச் சிறந்த செயல்களுக்கு மக்கள் போராட்டத்தின் முன்னணியில் இடமுண்டு.

## வியட்நாமில் 7 1/2 லட்சம் அமெரிக்கத் துருப்புகள்

தென் வியட்நாமிலுள்ள அமெரிக்கத் தளபதி வெஸ்ட்மூர்லண்ட் வேண்டுகோள் விடுத்தால் அது செவிசாய்க்கப்படும் என ஜோன்சன் கூறியுள்ளார். மேலும் துருப்புகள் தேவைப்படும் என வெஸ்ட்மூர்லண்ட் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வருடம் முடிவுக்குள் 4 லட்சம் அமெரிக்கத் துருப்புகள் தென் வியட்நாமில் இருக்கும் என மதிப்பிடப்படுகிறது. அடுத்த வருடம் இது 750,000 ஆகும் என ஹேஷ்யம் கூறப்படுகிறது.

# யூ. என். பி-யின் புடவைக் கூத்து!

## மக்களின் கண்ணில் மண்ணைத் தூவுகிறது

சமீபத்தில் யூ.என்.பி. அரசாங்கம் வாழ்க்கைச் செலவைக் குறைக்கப்போவதாகக் கூறி துணிக்குக் கட்டுப்பாடு விதித்து துணி வர்த்தகர்களுக்கு எதிராக ''பெரும் யுத்தம்'' நடத்தப்போவதாகத் தம்பட்டம் அடித்தது. துணி வர்த்தகத்தில் கொள்ளை இலாபம் அடிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுப்பார்கள். துணி வர்த்தகத்தில் இந்திய பெரும் முதலாளிகளுக்குள்ள ஏகபோக ஆக்கிரமிப்பை தகர்ப்பார்கள் என்றெல்லாம் முதலாளித்துவப் பத்திரிகைகள் தடபுடல் பிரசாரம் செய்து பொது மக்களை ஓரளவு நம்பவைத்தன. ஆனால் உண்மையில் நடந்தது என்ன?

கோடிக்கணக்கான ரூபாய்கள் பெறுமதியான துணிகள் வர்த்தகர்களால் பதுக்கப்பட்டன. இரவோடு இரவாகக் கடத்தப்பட்டு கள்ளச்சந்தையில் விற்கப்பட்டன உடைகளாகத் தைக்கப்பட்டுப் பதுக்கப்பட்டன. அசிட் தெளித்து துணியின் தரத்தைக் கெடுத்து பாவிக்க முடியாதபடி செய்து விற்கப்பட்டன. அகலத்தைக் கிழித்தும், சேலைகளின் முகதலையைக் கிழித்தும், கட்டுப்பாடு விலை எனக் கூறி பொது மக்கள் ஏமாற்றப்பட்டனர். இவை அனைத்தும் பொலிஸ் துப்பாக்கி சகிதம் காவல்காத்தும், பவனி வந்தபோதும் நடந்தன.

### அவதியும், ஆத்திரமும்

துணிகள் பதுக்கப்பட்டதனால், துணிக்குப் பஞ்சம் வந்துவிடுமோ என்ற பீதி மக்களைக் கவ்வி, தெருவெல்லாம் அல்லோல கல்லோலப்பட்டது. மக்கள் இரவு பகலாக புடவைக் கடைகளைச் சுற்றிச் சுற்றி வலம் வந்தனர். வீட்டுக்குச் செல்லாமல், சாப்பிடாமல் நடைபாதையில் படுத்து கடைகளை முற்றுகையிட்டார்கள். நெரிசலால் தலை சுற்றி விழுந்தார்கள். சிலர் இறந்தார்கள். இவற்றோடு பொலிசின் தடியடி, கெடுபிடி, தெருச் சுற்றும் யூ என். பி. காடையரின் பயமுறுத்தல்கள் முதலிய கொடுமைகளையும் அனுபவித்தார்கள். இவ்வாறெல்லாம் அவதிப்பட்டும் கூட தேவையான துணிகள் கிடைக்காமல் போகவே பொதுமக்களின் பொறுமை எல்லை கடந்து கட்டுக்கடங்காத நிலை ஏற்பட்டது.

துணி வர்த்தகர்களின் மோசடியை எதிர்த்த மக்களின் கோபக்கனல் எங்கே இந்திய வர்த்தகர்களைப் பொசுக்கிவிடுமோ எனப் பயந்த யூ. என். பி. ஆட்சியினர் அவர்களைத் தனது பொலிசின் மூலம் பாதுகாத்தது. மக்களைத் தாக்கியது.

### வாசலைத் திறந்தார்கள்

இந்த நிலை உச்சகட்டம் அடைந்தபோது, ரெடிமேட் உடுப்புகளுக்கு விலைக் கட்டுப்பாடு கொண்டுவரப்போவதாக அரசாங்கம் கூறியது. ஆனால் இதுவரை விலைக் கட்டுப்பாட்டைக் காணோம். பதுக்கப்பட்ட நைலோன், டெரிலின், சூட்டிங்குகள் உடுப்புகளாக மறுஅவதாரம் எடுத்து, கொள்ளை விலையிலேயே விற்கப்படுகின்றன. இதன்மூலம் மறைமுகமாகக் கொள்ளையடிக்கத் துணி வியாபாரிகளுக்கு வாசல் திறந்துவிடப்பட்டது. பதுக்கல் வேட்டையெனக் கூறிக்கொண்டு சிறிய வியாபாரிகள் மீது நாயெனப் பாய்ந்ததே தவிர, பெரிய பகாசுர வர்த்தகர்களின் மீது பாயவில்லை. இவ்வாறு செய்து மக்களின் கண்களில் மண்ணைத் தூவியது அரசாங்கம். எல்லாமே முச்சந்தி ஜாலவித்தைக்காரன் பேச்சாக நிகழ்ந்தன.

### துணை செய்கிறார்கள்

பெரு முதலாளிகளினதும், இந்திய வர்த்தகர்களினதும் நிதி உதவியுடன் கட்சி நடத்தும் யூ. என். பி. கடந்த தேர்தலின்போது இவர்களிடமிருந்து கோடிக்கணக்கான ரூபாய்களை வசூலித்து, பணத்தைத் தண்ணீராகச் செலவிட்டது நாடறிந்த ரசசியம். ஆட்சிக்கு வந்ததும், பொது மக்களை ஏமாற்றி, பெரு முதலாளிகளுக்கு கொள்ளையடிக்க வாய்ப்பளிக்கவே துணிக்கு விலைக் கட்டுப்பாடு எனும் செப்படி வித்தையை நடத்தியது என்பதைக் கடந்த 11-ந் தேதி வெளிவான புதிய துணி விலைக் கட்டுப்பாடு உத்தரவு அம்பலப்படுத்தியது.

கூப்பனுக்கு 6 யாருக்குப் பதிலாக 2 யார்தான் கொடுக்கப்படுமாம் 22-வது இலக்கக் கூப்பன் புத்தகத்தின் 103, 104-வது புள்ளிகளுக்கு புள்ளி ஒன்றுக்கு 2 யார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கூப்பனில்லாது வாங்கும் ஐவுளிகள் கூப்பனுக்கு வாங்குவதையும்விட அதிக விலைக்கு விற்கப்படும். ஆகக் கூடிய கட்டுப்பாட்டு விலை ரூ. 2.97 சதமும், ஆகக் கூடிய கட்டுப்பாட்டு விலை 5 ரூபா எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அ. ராமநாதன்**

ஒரு ஷேர்ட் தைப்பதற்கு $2\frac{1}{2}$ யார் வேண்டும். கூப்பனுக்கு ஒரு யார் 2 97 சத விகிதம் 2 யார் வாங்கியபின் மிச்சம் $\frac{1}{2}$ யாரை வாங்குவதற்கு ரூ. 2.50 சதம் கொடுக்கவேண்டும்! இதுதான் யூ. என். பி. ஆட்சியினர் தம்பட்டம் அடிக்கும் வாழ்க்கைச் செலவுக் குறைப்பு!

இப்போது அமுல்படுத்தும் துணி விலைக் கட்டுப்பாடு முன்னிருந்த விலைகளைக் காட்டிலும் சில ரகங்களுக்கு அதிகமாகவிருக்கிறது. இப்போது இறக்குமதியாகும் துணிகளின் ஆகக் கூடிய கப்பல் கட்டணம், இன்சூரன்ஸ் ஆகியன உட்பட கொள்முதல் விலை ரூபா 1-00 ஆகும். இறக்குமதி செய்யப்படும் துணிகளின் சுங்க வரி யாரொன்றுக்கு ஆகக் கூடுதலாக 85 சதம் வசூலிக்கப்படுகிறது. ஆக, ஒரு யார் துணி இறக்குமதி செய்வதற்கு ரூ. 1-85 சதத்திற்கு மேல் இல்லை. ஆனால் புதிய கட்டுப்பாடு ஆகக் கூடுதலாக யாரொன்றுக்கு ரூ. 5-00. இவ்விதம் விலையை நிர்ணயித்திருப்பதால் மக்களை மேலும் சுரண்டுவதற்கு இறக்குமதி கொள்ளையர்களுக்கு நல்ல வாய்ப்பை சட்ட ரீதியில் யூ. என். பி கூட்டரசாங்கம் அனுமதித்துள்ளது.

### எங்கே மறைப்பது?

ஒரு கூப்பனுக்கு 2 யார் வாங்கி முன்னால் மறைப்பதா, பின்னால் மறைப்பதா என்பதையும் ஆட்சியினர் கூறியிருந்தால் எவ்வளவு உதவியாயிருக்கும்! 2 யார் துணியைக்கொண்டு பிரேதத்தைக் கூட மறைக்க முடியாது. என்பதை ஆட்சியினர் மறந்துவிட்டது புதுமையல்ல.

### திசை திருப்பும் முயற்சி

என்றாலும், துணிகளைப் பதுக்கி மக்களையும், அரசாங்க இயந்திரத்தையும், மாயவித்தைக்காரனைப்போல் ஏமாற்றிய பெரும் வர்த்தகர்கள்மீது எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் கையாலாகாத்தனமாக இருந்த யூ. என். பி. ஆட்சி மக்களைப் பார்த்து புதிய 103, 104 கூப்பன்களுக்குத் துணி வாங்கும்போது கவனமாயிருங்கள், வர்த்தகர்கள் ஏமாற்றிவிடுவார்கள் என்று மான வெட்கமின்றிக் கூறுகிறது.

''சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தானாம் ஆண்டி'' என்பதுபோல் இருக்கிறது இன்றைய ஆட்சியாளரின் கோமாளி நடவடிக்கைகள்.

விலைக் கட்டுப்பாட்டை ஆரம்பத்திலேயே சரிவரக் கணித்துச் செய்யப்பட்டிருந்தால் இத்தகைய பல்டிகளுக்கு இடமில்லை. நான் அடிப்பது போல் அடிக்கிறேன்—நீ அழுவதுபோல் அழு!'' என்பதுபோல் செயல்பட்டதன்மூலம் நாட்டில் துணிப் பஞ்சத்தையே உண்டாக்கிவிட்டுள்ளது இந்த ஆட்சி.

பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டமும், வாழ்க்கைச் செலவின் உயர்வும் ஆட்சியினரைத் திண்டாடச் செய்கிறது. அவர்களின் போலிவாக்குறுதிகள் காற்றில் பறக்கின்றன. தொழிலாளர்கள் வாழ்க்கைச் செலவின் உயர்வை எதிர்த்து ஒரு நாளைக்கு ஒரு ரூபா சம்பள உயர்வு என்ற கோரிக்கையை முன்வைத்து அணி திரள்கிறார்கள். எந்த நேரம் பொது வேலைநிறுத்தம் நிகழுமோ என ஆட்சியினர் பயப்படுவதால், மக்களின் கவனத்தைத் திசை திருப்ப இந்தப் புடவைக் கூத்தை நடத்தினார்கள். அதுவும் பரிதாபமான தோல்வியில் முடிந்துள்ளது.

கூட்டுறவு மொத்த ஸ்தாபனத்தின் வர்த்தகத்தை ஒழித்துவிட அசுர முயற்சி செய்யும் ஏகபோக முதலாளிகளுடன் ஏகாதிபத்தியத்தின் செல்லப்பிள்ளையான யூ. என். பி-யும் அதன் பிற்போக்கு சகாக்களும் கடந்த தேர்தலின்போது கூட்டுறவு மொத்த ஸ்தாபனத்தைக் குறிவைத்துத் தாக்கியதை யாரும் மறந்துவிட முடியாது. கோடிக்கணக்கான ரூபாய்களை இதற்காகவே கொட்டிய பிற்போக்கு முதலாளித்துவ சக்திகளின் கழுத்தை யூ. என். பி. ஆட்சி அறுத்துவிடும் என்று எதிர்பார்ப்பது ஏமாளித்தனம். அப்படி எதிர்பார்த்தவர்கள் ஏமாந்திருப்பார்கள். யூ. என். பி. ஆட்சி தனது வர்க்கத்தையே எதிர்த்துப் போராடும் அளவுக்கு வர்க்கக் குணம் மழுங்கியதல்ல என்பதைச் சமீபத்திய சம்பவங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

## விவசாய மாநாட்டின் வெற்றிக்கு உதவுவோம்!

## நாளிதழ்களுக்கான 2லட்ச நிதியைப் பூர்த்திசெய்வோம்!

### வாலிபர் சம்மேளன வட பிரதேசக் கமிட்டி தீர்மானம்

இம்மாதம் 20, 21-ந் தேதிகளில் அனுராதபுரத்தில் நடைபெறஇருக்கும் அகிலஇலங்கை விவசாயிகள்சம்மேளன மாநாட்டின் வெற்றிக்கு சகல விதத்திலும் உதவி செய்வதன் மூலம் மாநாட்டை ஒரு பூரணமான புரட்சிகர விவசாயிகளின் மாநாடாக்குவோம். மேற்படி மாநாட்டை ஒவ்வொரு வாலிபர் சங்கமும் மிக அக்கறையுடன் எதிர்நோக்கவேண்டும். மாநாட்டில் கலந்துகொள்ளும் எல்லோருடைய உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக அரிசி, காய்கறி சேர்ப்பு இயக்கத்தைத் துரிதப்படுத்தவேண்டும். அத்துடன் கூடுதலான விவசாயிகளை விவசாய சங்கங்களிலிருந்து அனுப்புவதுடன் கூடுதலான பார்வையாளர்களையும் அனுப்பி மாநாட்டை எல்லாவிதத்திலும் ஒரு வெற்றிகரமான மாநாடாக்குவோம்.

மேற்கண்ட தீர்மானம் 20-8-66-ல் கூடிய இலங்கை வாலிபர் சங்கசம்மேளனத்தின் வடபிரதேசக் கமிட்டி கூட்டத்தில்ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. மேலும், நமது கட்சி ஆரம்பிக்க இருக்கும் தினசரிப் பத்திரிகைகளுக்காக இலங்கை பூராவும் நடைபெறும் இரண்டு லட்ச நிதிக்கான இயக்கத்தை வட பிரதேசத்தில் மேலும் துரிதப்படுத்துவதுடன் உழைக்கும் சகல வாலிபர் தோழர்களும் ஒரு நாள் சம்பளத்தை இவ் இயக்கத்திற்குக் கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும்நிறைவேற்றப்பட்டது.

சகல வாலிபர் சங்கங்களும் இம்மாத முடிவுக்குள் தங்களால் ஒழுங்குபடுத்தப்பட்ட வேலைத் திட்டங்களை பிரதேசக் கமிட்டிக்கு அனுப்பவேண்டும் என்றும், பின்னர் எல்லாச் சங்கங்களின் வேலைத் திட்டங்களையும் விவாதித்து ஒழுங்குபடுத்தி வட.மாகாணத்துக்கான ஒருபொது வேலைத் திட்டத்தை வரைவதன் மூலம் எமது பிரதேச மாநாட்டையும், அதையொட்டி தேசிய மாநாட்டையும் நடத்துவதற் தீர்மானிக்கப்பட்டது.

காங்கேசன்துறை வாலிபர் சங்கம் நடத்த இருக்கும் விளையாட்டுப் போட்டியில் சகல வாலிபர் சங்கங்களும் கலந்துகொள்வதுடன் வெளியில் இருக்கக் கூடிய எல்லாக் கழகங்களையும் கலந்துகொள்ளச் செய்து எமது இயக்கத்தின் வளர்ச்சிக்கு அவ் விளையாட்டுப் போட்டியை வெற்றிகரமாக நடத்துவதற்கு எல்லா வாலிபர் சங்கங்களும் உதவுதல் வேண்டும் எனவும், 'தொழிலாளி' பத்திரிகையின் தற்போதைய விற்பனையை இரண்டு மடங்காக உயர்த்துவதற்கான எல்லா முயற்சிகளிலும் பிரதேசக் கமிட்டி முன்மாதிரி காட்டவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

## அரசியலை முதன்மைப்படுத்த என்றும் மறவோம்



அகில இலங்கை
விவசாயிகள் சம்மேளனத்தின்

**முதலாவது தேசிய மாநாடு**

**செப்: 20, 21-ம் திகதிகளில்**

விவசாய - தொழிலாளர் ஊர்வலமும்
பொதுக் கூட்டமும்

# 21-ல்

சரித்திர நகரம்
**அனுராதபுரத்தில்**

# இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஆபத்து

உலகச் சந்தையில் தேயிலையின் விலை வீழ்ச்சியடைந்து வருகிறது. இதனுல் இலங்கையின் பொருளாதாரத்தில் பெரும் நெருக்கடி தோன்றியுள்ளது. நமது மொத்த வருமானத்தில் 60 வீதம் தேயிலையிலிருந்து கிடைக்கிறது. தேயிலையின் விலை வீழ்ச்சி இந்த வருமானத்தைப் பாதித்து நமது நாட்டின் பொருளாதாரத்திற்கு ஆபத்தை உண்டாக்கியுள்ளது. இதற்குக் காரணம் ஏகாதிபத்திய நாடுகள்தான்.

உலகச் சந்தையில் தேயிலையின் விலைவாசியை ஏகாதிபத்திய நாடுகள் தான் நிர்ணயிக்கின்றன; கட்டுப்படுத்துகின்றன. விலையைப் பொறுத்த வரையில் அந்நாடுகள் வைத்ததுதான் சட்டம். தேயிலை விலையின் சூத்திரக் கயிறு அந்நாடுகளின் கையிலிருப்பதால் விலை வீழ்ச்சியைக் கொண்டு வரவும் முடிகிறது. ஏற்கனவே தேயிலையைப்பற்றி 'தொழிலாளி'யில் வந்த கட்டுரைகள் இதைப்பற்றி விளக்கியிருப்பது வாசகர்களுக்கு நினைவிருக்கும்.

வர்த்தக அமைச்சர் உட்பட ஆளும் வட்டாரமும் தேயிலை விலை வீழ்ச்சியடைந்து வருவது குறித்து கவலையும், கலக்கமும் அடைந்திருப்பதை அது வெளியிட்டுள்ள செய்திகள் மூலம் அறிய முடிகிறது. ஆனுல் இந்த நிலைமைக்குக் காரணமாக இருக்கும் ஏகாதிபத்திய நாடுகளைக் கண்டிக்கவோ, அவற்றின் தில்லுமுல்லுகளை அம்பலப்படுத்தவோ ஆளும் வட்டாரம் முயலாது ஏனெனில் யூ என். பி. ஏகாதிபத்தியத்தின் நேரடியான ஏஜெண்ட். அது ஏகாதிபத்தியத்தின் சங்கிலியில் நாட்டைக் கட்டிவிட்டிருக்கிறது. ஆதலால் நமது பிரதான உற்பத்திப் பொருளின் தலை விதியை ஏகாதிபத்தியம் நிர்ணயிப்பதைத் தவிர்க்க முடியாது. தேயிலையின் விலை வீழ்ச்சியையும் தடுக்க முடியாது. சுருங்கச் சொன்னுல் ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுபடாத வரை நமது பொருளாதாரம் ஆபத்தான நிலையிலேயே இருந்துகொண்டிருக்கும்.

# செப். 8-ல் கடைசி எச்சரிக்கை

சி. டி. யூ. எப். முதலாளிமாருக்குச் சமர்ப்பித்துள்ள 12 கோரிக்கைகளுக்கு ஆதரவாக இம்மாதம் 8-ம் திகதியன்று இரண்டாவது அடையாள வேலைநிறுத்தத்தில் கலந்துகொள்ளுமாறு சகல தனியார் துறைத் தொழிலாளர்களுக்கும் அது அறைகூவல் விடுத்துள்ளது. பகல் வேளையில் தத்தமது வேலைத் தலங்களைவிட்டு வெளியேறும் தொழிலாளர்கள் டி மெல் பார்க்கை வந்தடைவர். அங்கிருந்து புறப்படும் தொழிலாளர் ஊர்வலம் நகரை வலம் வந்து மீண்டும் டி மெல் பார்க்கை வந்தடையும் பொதுக் கூட்டமொன்றும் நடைபெறும்.

இரண்டாவது அடையான வேலை நிறுத்தத்திற்கான ஒழுங்குகள் ஜரூரான முறையில் நடைபெற்றுவருகின்றன. இந்த அடையாள வேலைநிறுத்தம் முதலாளிமாருக்கும் அரசாங்கத்துக்கும் தெரிவிக்கும் கடைசி எச்சரிக்கையாக இருக்கும். 12 கோரிக்கைகளை அளிக்காவிட்டால் பொது வேலை நிறுத்தம் நடக்கும் என்பதை நினைவூட்டும். இவ்வேலை நிறுத்தத்தில் முன்னைய அடையாள வேலை நிறுத்தத்தை விடக் கூடிய தொகையினர் கலந்து கொள்வர். அரசியல், தொழிற் சங்க பேதங்களை மறந்து நாளுக்கு ஒரு ரூபா கோரிக்கையை வென்றெடுக்க ஒன்றுபடுமாறு சி. டி யூ. எப். தனியார் துறைத் தொழிலாளர்களை அறை கூவியுள்ளது.

1-ம் பக்கத் தொடர்

## வியட்நாம் மக்களுக்கு......

கச் செயலாகும். இச் ''சமாதானச் சூழ்ச்சிகள்'' உலக மக்கள் முன்னுல் அம்பலப்படுத்தப்பட வேண்டும்.

'வியட்நாம் மக்களின் போராட்டம் இலங்கை மக்களுக்கு பிரம்மாண்டமான ஆதரவாகவுள்ளது. இலங்கைத் தொழிலாளர்களாகிய நாம் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிரான வியட்நாம் மக்களின் போராட்டத்துக்கு ஆதரவு தருவதுடன் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பை முறியடிப்பதற்கும் உலக சமாதானத்தை நிலைநாட்டுவதற்கும் வியட்நாம் மக்களுடன் தோளோடு தோள் நின்று போராடுவோம்.'' அந்தச் செய்தியின் இறுதியில் பின் வரும் கோஷங்கள் இடப்பட்டிருந்தன.

- ''வியட்நாம் ஜனநாயகக் குடியரசு நீடூழி வாழ்க!
- வியட்நாம் லாஓ டொங் கட்சி நீடூழி வாழ்க!
- தலைவர் ஹோ சி மின் நீடூழி வாழ்க!
- வியட்நாம் மக்களதும் இலங்கை மக்களதும் உறுதிப்பாடும் நட்புறவும் நீடூழி வாழ்க!''

## வல்லை மில்லில் வேலை நிறுத்தம்

வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ள ஒன்பது தொழிலாளர்களுக்கும் மீண்டும் வேலை அளிக்கக் கோரி சி. டி. யூ. எப்-பில் இணைந்துள்ள அகில இலங்கை நெசவுத் தொழிலாளர் சங்கத்தின் வல்லைசிலோன் ஸ்பின்னிங் அன்ட் டெக்ஸ்டைல் மில் (யாழ்ப்பாண பிரதேசத்திலுள்ளது) கிளை அங்கத்தவர்கள் இம்மாதம் 2-ம் திகதியிலிருந்து வேலை நிறுத்தம் செய்துவருகின்றனர்.

## 'எத்த'வுக்கு எமது சவால்

அரசாங்கத்தினதும் ஆதரவுடன் வெளிவரப் போகிறதென்றும் பிதற்றியுள்ளார்.

'எத்த' திரிபுவாதக் கும்பல் அடக்க முடியாத சீற்றம் கொண்டு ஜன்னி பிடித்து, நுரை கக்குகின்றது என்பது தெளிவாகின்றது. இவர்களின் சீற்றத்தை நாம் அறிந்து கொள்ள முடியும். அவர்களுடைய பொய்களும் ஏமாற்றுகளும் அம்பலமாகப் போகின்றன. எம்மைப் பொறுத்த வரையில் எமது எதிரிகள்—யூ. என். பி-யும், திரிபுவாதக் கும்பலும்—எம்மைத் தாக்குவதை நாம் வரவேற்கின்ருேம். மேலும் மேலும் அவர்கள் எம்மைத் தாக்குவதனுல், மேலும் மேலும் சரியான பாதையில் நாம செல்கின்ருேம் என்ற நம்பிக்கை எமக்கேற்படுகின்றது. தொடர்ந்தும் அப் பாதையில் நாம் உறுதியுடன் செல்வோம்.

### 'எத்த'வுக்கு சவால்

இவ் வாரம் 'எத்த' எமக்கெதிராக எழுதிய அவதூறுகளை தொழிலாளி' விபரமாக அம்பலப்படுத்தும். ஆனுல், இவ் வாரம் 'எத்த'வுக்கு நாம் பின்வரும் சவாலை விடுக்கின்ருேம்.

1. ''ஜனஹண்ட'' அமெரிக்க சீ. ஐ. ஏ-யின் பண உதவியுடன் வெளிவரப் போகிறது என்பது பற்றியோ,
2. லேக்ஹவுஸும்எஸ்மண்ட் விக்கிரசிங்காவும ராய்ட்டர் ஸ்தாபனத்தின் செய்திகளை இலவசமாக தருவதற்கு உடன்பட்டுள்ளார்கள் என்பது பற்றியோ,
3. அரசாங்கம் ஒரு மொனேடைப் அச்சு யந்திரத்தை இறக்குமதி செய்வதற்கு நாம் சமர்ப்பித்த விண்ணப்பத்தைச் சாதகமான முறையில் பரிசீலனை செய்கின்றது என்பது பற்றியோ அல்லது மேற்படி விண்ணப்பத்தை நாம் செய்துள்ளோம் என்பது பற்றியோ,

ஒரு கடுகளவு ஆதாரமேனும் காட்டுமாறு'எத்த'வுக்கு நாம் சவால் விடுகின்ருேம்.

இவையெல்லாம் மனதால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத அபாண்டங்களாகும். 'எத்த'வினுடைய இப் பிரச்சாரம் முற்போக்கு சக்திகளின் மத்தியில் குழப்பத்தை உண்டு பண்ணவும், அவர்களிடமிருந்து எம்மைத் தனிமைப்படுத்தவும் விரும்பி எமக்குச் சேறு பூசும் ஒரு முயற்சியே தொழிலாளர்களிடமிருந்து எமது இரண்டு இலட்ச ரூபா பத்திரிகை நிதிக்காக ஒரு நாள் சம்பளத்தைச் சேகரிக்கும் இயக்கத்திற்கு முட்டுக்கட்டை போடும் முயற்சியே இது. ஆனுல் இந்த முயற்சியில் இவர்கள் தோல்வியடைவர்.

அடுத்துவரும் பிரதிகளில் பூரணமாகப் பதிலளிப்போம்.

1-ம் பக்கத் தொடர்

ஆனுல், உடனடியாக ஒரு விஷயத்தை மட்டும் நாம் நேரடியாகக் கூறிவைக்க விரும்புகின்ருேம் ஒவ்வொரு அரசியல் கட்சியும் தனது நடவடிக்கைகளுக்காக பணம் சேகரிக்கும் முறை அவரவர்களது சொந்த விஷயம். 'எத்த' இன்று அச்சிடப்படும் விலையுயர்ந்த அச்சுயந்திரம் வாங்குவதற்கு அவர்களுக்கு எங்கிருந்து பணம் கிடைத்தது என நாம் ஒருபோதும் கேட்டதில்லை. இதற்கான பணம் தொழிலாளர்களிடலிருந்தோ மக்களிடமிருந்தோ சேகரிக்கப்படவில்லை என்பது எமக்குத் தெரியும் விக்கிரமசிங்க, கெனமன் ஆகியோரின் சொந்தப் பொக்கிஷத்திலிருந்தும் இது கிடைக்கவில்லை.

ஒவ்வொரு அரசியல் கட்சியும் தனது அரசியல் நடவடிக்கைகளுக்கு தனது அங்கத்தவர்களிடமிருந்தும், அனுதாபிகளிடமிருந்தும், ஆதரவாளர்களிடமிருந்தும் பணம் சேகரிக்கின்றன. எவருக்கும் தெரிந்த காரணங்களுக்காக, சகல அரசியல் கட்சிகளும் தமக்கு யார் யார் பணம் தருகிருர்கள் என்பதைத் தெரியப்படுத்துவதில்லை. குறிப்பாக எமது கட்சியைப் போன்ற புரட்சிகரக் கட்சிக்கு இது மிக முக்கியம் ஏனெனில் எமது ஆதரவாளர்கள் அல்லது எம்முடன் தொடர்புள்ளவர்கள் அரசாங்கத்தின் தாக்குதலுக்கு ஆளாக்கக்கூடும்.

எமக்குப் பணம் கிடைப்பது நாம் சேவை செய்யும் மக்களிடமிருந்த தான். குறிப்பாக, தொழிலாளர் வர்க்கத்திடமிருந்துதான். தொழிலாளர் வர்க்கத்துக்கு நாம் செய்துள்ள சேவை வேறெவராலும் ஒப்பிட முடியாததாகும். எமது பத்திரிகை நிதிக்கு ஒரு நாள் சம்பளம் கொடுக்கத் தொழிலாளர்கள் எவரும் இல்லையென்று 'எத்த' நினைக்கிறது. தொடர்ந்து வரும் எமது பத்திரிகைகளைப் படித்தால் அவர்கள் உண்மையைப் புரிந்துகொள்வர்.

எம்மேல் அவதூறுகளையும் வீண் பழிகளையும் சுமத்துவதன் மூலம், 'எத்த' திரிபுவாதக் கும்பல் தற்காலிகமாக ஒரு சிலரைக் குழப்பி ஏமாற்றக்கூடும் ஆனுல், இறுதியில் அவர்கள் வெற்றியடைய முடியாது. அரசியல் மேடையிலிருந்து எம்மைத் துரத்த முடியாது. விடியற் காலையிலுள்ள பனித் துளிகள் கதிரவனின் ஒளியைக் கண்டதும் எப்படி மறைந்தொழிகின்றனவோ, அது போலவே, ''ஜன ஹண்ட'' தோன்றியதும் பத்திரிகைத் துறையிலும் அரசியல் துறையிலும் பொய்களைப் பிரசுரிக்கும் 'எத்த' போன்ற செய்தித் தாள்களும் மறைந்தோடி விடும். அதுவரை அவர்கள் மனம் புகையட்டும், சினங்கொள்ளட்டும். நாய்கள் குரைக்கட்டும், ஆனுல் வண்டி போய்க்கொண்டேயிருக்கும்.

## தண்ணீரூற்றில் விவசாயிகள் சங்கம்

அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் தண்ணீரூற்று (முல்லைத்தீவுப் பிரதேசம்) கிளையின் கூட்டம் கடந்த 25-ம் திகதியன்று நடைபெற்றது. இக் கூட்டத்தில் சி. டி, யூ. எப் பின் யாழ் பிரதேசத் தலைவர் தோழர் வீ. ஏ. கந்தசாமி, விவசாயிகள் சம்மேளன முல்லைத்தீவும் பிரதிநிதி தோழர் இ. வே. துரைரத்தினம் உட்பட மற்றும் பலர் பேசினர். கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: பொ. நடராசபிள்ளை, செயலாளர்: அ. சங்கரலிங்கம், பொருளாளர்: இ. வி. இராஜா, செயற்குழுவுக்கு அ. பாலகிருஷ்ணன், செ. கனகலிங்கம், க. இராசரத்தினம், ச, மயில்வாகனம், வி. கனகசுந்தரம், சி. சிவராசா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

பதிப்பித்து வெளியிடுபவர்:- ஏ. ஜயசூரியா, 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2, அச்சிட்டது: ''தொழிலாளி'' அச்சகம், 121, யூனியன் பிளேஸ், கொழும்பு-2.

**மார்க்சிஸ - லெனினிஸத்தை என்றும் மறவோம்**